பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 05 வெள்ளிக்கிழமை (20-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:24

## தமிழக அகதிகள் விடயம் ஆராயும் கிளிநொச்சி கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு,டிசெ.20

கிளிநொச்சியிலுள்ள 'சிறான்' அலுவலகத்தில் இன்று நடைபெறவிருந்த கூட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டிருக்கிறது. வடக்கில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே இக்கூட்டம் பிற்போடப்பட்டதென கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பியழைத்து வந்து அவர்களை மீளக்குடியமர்த்துவது குறித்து ஆராய்வதற்காக இக்கூட்டம் கிளிநொச்சியில் நடைபெறவிருந்தது.

இக்கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும், புத்தாண்டில் அது நடைபெறலாம் எனவும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

இந்தியா உட்பட சகல தரப்பின

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ - 9 வீதி சீராக்கப்பட்டு போக்குவரத்து ஆரம்பம்!

யாழ்ப்பாணம்,டிசெ.20

ஏ-9 கண்டி வீதியூடான போக்குவரத்து நேற்று வழமைக்குத் திரும்பியது. வீதியை மேவி வெள்ளம் பாய்ந்ததால் வீதியில் ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையே ஆங்காங்கே ஏற்பட்ட சேதங்களை அடுத்து இந்த வீதியூடான போக்குவரத்து நேற்று முன்தினம் தடைப்பட்டது தெரிந்ததே.

ஆனையிறவு - பரந்தன் பகுதியில் - வீதியில் - வெள்ளத்தால் சேதமடைந்த பகுதிகளை தற்காலிகமாக சீர்செய்யும் வேலைகள் நேற்றுமுன்தினம் இரவிரவாக நடைபெற்றன. திருத்த வேலைகள் அன்றிரவே பூர்த்தியடைந்தன. அதனையடுத்து அந்த வீதி வழியே இரவு 10 மணிக்கு பின்னர் வாகனப்போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது.

இரவுவேளை ஆனையிறவைத் தாண்டி வந்த சில வாகனங்கள் முகமாலை ஊடாக யாழ்ப்பாணம் வர புலிகளும், படையினரும் அனுமதித்தனர்.

நேற்றுப் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியதை அடுத்து கிளிநொச்சியில் தரித்து நின்ற பல வாகனங்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

# 3 கிலோ ரி.என்.ரி. வெடிமருந்து

# தீ அனர்த்தத்துக்குக் காரணம்!

### விமானப் படையினர் அதிருப்தி

கொழும்பு,டிசெ.20

ஐந்து லாம்புச் சந்தி தீ அனர்த்தம் தொடர்பாக தங்களுக்கு உடனடியாகத் தகவல் தரப்பட்டிருக்குமானால் தமது தீயணைப்புப் படையினர் மூலம் உயிரிழப்புக்களைக் குறைத்திருக்கலாம் என விமானப்படையினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

தீப்பிடித்து நீண்ட நேரத்தின் பின்னரே தமக்கு தகவல் தரப்பட்டதாக விமானப்படையினர் கூறுகின்றனர். (ஐ)

### ஜனாதிபதி அதிர்ச்சி

கொழும்பு,டிசெ.20

ஐந்துலாம்புச் சந்தி தீ அனர்த்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது அதிர்ச்சியையும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக விரிவான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் ஜனாதிபதி கேட்டுள்ளார். (ஐ)

## இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் சந்தேகம்

கொழும்பு,டிசெம்பர்20

கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியில் ஏற்பட்ட கொடூர தீ அனர்த்தத்துக்கு அதிசக்தி வாய்ந்த - சுமார் மூன்று கிலோ எடையுள்ள - ரி.என்.ரி.ரக வெடிபொருள்கள் காரணமாக இருந்திருக்கலாம்.

இரசாயனப் பகுப்பாய்வாளர்களை மேற்கோள் காட்டி பொலீஸ் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இந்த வெடிபொருள்கள் அப்பகுதியில் இருந்த பட்டாசுக் களஞ்சியசாலையிலேயே இருந்திருக்கலாம். அவை வெறும் பட்டாசு வெடிமருந்துகள் அல்ல, அதிசக்தி வாய்ந்த வெடிபொருள்கள் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இரசாயனப் பகுப்பாய்வாளர்களின் அறிக்கையின்படி சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து எட்டு அடி உயரத்தில் ரி.என்.ரிரக - அதிசக்தி வாய்ந்த - வெடிபொருள்கள் இருந்திருக்கலாம் என கொழும்பு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பிறேமலால் ரணகல செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

அதி சக்தி வாய்ந்த வெடிபொருள் இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதை அடுத்து இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பு குற்றப் புலனாய்வுப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

"இந்த அனர்த்தத்துக்கு பட்டாசுகள் மட்டுமல்லாமல் வெடிமருந்துகளும் காரணமாக இருந்திருக்கலாம் என நாங்கள் சந்தேகிக்கின்றோம். அதனால், குற்றப்புலனாய்வுப் பிரிவு அணி ஒன்றை அனுப்பி அந்த விசாரணையை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளேன். அவர்கள் நேற்றுக் காலையிலிருந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்." - இவ்வாறு தெரிவித்தார் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா.

வெடிபொருள்கள் வெடித்ததால் கடையிலிருந்த இரும்புக் கதவுகளுக்கு ஏற்பட்ட சேதத்தைப் பார்க்கும்போது அது மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கலாம் எனக் கூறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த வெடிபொருள் வெளியில் இருந்து வீசப்பட்டதல்ல என்றும் கடைக்குள் இருந்தே வெடித்திருக்கிறது என்றும் ஒரு பொலீஸ் அதிகாரி கூறியிருக்கிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை அறிக்கை கோருகிறார் பிரதமர்

ஐந்துலாம்புச் சந்தியில் இடம்பெற்ற கொடூர தீ அனர்த்தம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் கொள்வனவுக்காக வர்த்தக நிலையங்களுக்குச் செல்லும் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படியும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே பிரதமர் இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தார். (ஐ)

குடாநாட்டிலும்

## செய்தியாளர்களின் விவரம் பொலீஸார் திரட்டுகின்றனர்!

யாழ்ப்பாணம்,டிசெ.20

செய்தியாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பற்றிய விவரங்களைத் திரட்டும் நடவடிக்கையைப் பொலீஸார் குடாநாட்டிலும் ஆரம்பித்திருக்கின்றனர்.

ஊடகவியலாளர்கள் பற்றிய விவரங்களை தனித்தனியாகச் சேகரிக்கும் நடவடிக்கை பொலீஸ் தலைமையகத்தினால் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கிழக்குப் பகுதியில் செய்தியாளர்களின் வீடுகளுக்குச் சென்று பொலீஸார் விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கிவிட்டனர். ஊடகவியலாளர் அமைப்புகளும், பத்திரிகையாளர் சங்கங்களும் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இப்போது இந்த நடவடிக்கையை குடாநாட்டிலும் பொலீஸார் ஆரம்பித்திருக்கின்றனர். இளவாலை பொலீஸ்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பலியானோர் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்தது!

கொழும்பு,டிசெ.20

ஐந்துலாம்புச் சந்தியில் இடம்பெற்ற தீ அனர்த்தத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று நண்பகல் வரை 20 சடலங்கள் மீட்கப்பட்டிருந்தன. மற்றொருவர் உயிரிழந்தது உறுதிப்படுத்தப்பட்டுவிட்ட போதும் அவரது சடலம் இன்னும் மீட்கப்படவில்லை.

தீ விபத்து நடந்த சேகர் கட்டடத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றன. அருகே உள்ள கடைகளிலிருந்து பொருள்கள் நேற்று அப்புறப்படுத்தப்பட்டன.

இதேவேளை -

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் வரதர் அணியின் உறுப்பினர் ஒருவரைக் காணோம்!

மட்டக்களப்பு,டிசெ.20

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டிருந்த தமது கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவர், கடந்த திங்கட்கிழமை இரவுமுதல் காணாமல் போயுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வரதர் அணி தெரிவித்துள்ளது.

வெல்லாவெளி பிரதேச சபை உறுப்பினரான பூபாலபிள்ளை அழகுதுரை என்பவரே காணாமல் போயுள்ளார். மண்டூரில் உள்ள தமது வீட்டிலிருந்து தாயாரின் வீட்டிற்குச் சென்று திரும்பும் வழியில் இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியின் தேசிய அமைப்பாளரும் வெல்லாவெளி பிரதேச சபைத் தலைவருமான அழகுதுரை ரட்ணம் விடுத்துள்ள அறிக்கையில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### காஞ்சி சுவாமிகள் வருகை

யாழ்ப்பாணம்,டிசெ.20

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் இன்று இடம்பெறும் ரதோற்சவத்தில் பங்குபற்றுவதற்காக காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகளின் சிஷ்யன் பஞ்சாபிகேசன் சுவாமிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இன்றுகாலை 7மணிமுதல் 10 மணிவரை இலங்கை வானொலியில் இடம்பெறவுள்ள இரதோற்சவ நேரடி அஞ்சலில் சுவாமிகளின் ஆசியுரையும் இடம்பெறும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'மோட்டோ றோலா' தொலைபேசி 'அவுட்'!

### ரெலிகொம் சேவையும் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான 'மோட்டோ றோலா' தொலைபேசி சேவை நேற்று அதிகாலை முதல் செயலிழந்திருக்கிறது.

அநுராதபுரம் தொலைத் தொடர்பு கோபுரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே சேவை சீர்குலைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

'ரெலிகொம்' தொலைபேசி சேவைகளும் நேற்றுப் பகல் சீர்குலைந்திருந்தன. ரெலிகொம் சேவையில் ஒரு தொகுதி செயலிழந்திருப்பதாக ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன. இதன் காரணமாக வெளியிடங்களுக்கான அழைப்புகளை பெறுவதில் சிரமமான நிலை நேற்றுக் காணப்பட்டது. இந்தச் சேவைகள் இன்று வழமைக்குத் திரும்பிவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினால் நடத்தப்பட்ட பட்டப்பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் -

நிகழ்வில் கலந்துகொண்ட வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம், வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு இணைப்பாளர் பேராசிரியர் என்.ஞானக்குமாரன், பதிவாளர் திருமதி நா.தங்கராஜா மற்றும் சான்றிதழ் பெறுவோரை முறையே இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம். *(படங்கள்:ரமணன்)*

# பொ.ஐ.முன்னணி ஆட்சி அமைக்க முஸ்லிம் காங். உதவ மாட்டாது!

## ஐ.தே.கவும் கூட முஸ்லிம்களின் முதுகில் சவாரி செய்ய முடியாது என்கிறார் ஹக்கீம்

அம்பாறை,டிசெ.20

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆட்சியில் அமர்த்த முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் உதவ மாட்டாது. பொது மக்கள் ஐக்கிய முன்னணியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ, எதுவானாலும் சரி, முஸ்லிம்களின் முதுகில் ஏறிச் சவாரி செய்யலாம் என்று நினைக்கத் தேவையில்லை. அது நடக்காது என்று ஆவேசமாகக் கூறினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனது அம்பாறை மாவட்ட விஜயத்தின்போது நேற்றுமுன்தினம் நிந்தவூருக்குச் சென்றார். அங்கே மாலை 6.30 மணியளவில் அமைச்சர் ஜும்ஆ பள்ளிவாசலுக்குத் தக்பீர் முழக்கத்துடன் அழைத்துச் செல்லப்பட்டார். அமைச்சருடன் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில், முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எம்.ரி.ஹஸன் அலி மற்றும் அதியுயர் பீட உறுப்பினர்கள் சிலரும் சென்றனர்.

பள்ளிவாசலில் பிரதேச மக்கள் பலர் கூடினர். முஸ்லிம் காங்கிரஸ் இரண்டு அணியாக இன்று பிரிந்திருப்பதற்குப் பின்னணியில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி இருக்கிறது என்றும் -

பிரதமர் ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்து தங்கள் ஆட்சியை நிறுவுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய முன்னணியினர் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பீக்களை பலரை தம் பக்கம் இழுக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர் என்றும் -

இந்த நிலையில் இப்போது பிரிந்து நிற்கும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பீக்களின் ஆதரவை தாம் இழந்து விட விரும்பாமல் அவர்கள் விடுக்கும் நியாயமற்ற கோரிக்கைகளைக்கூட நிறைவேற்ற பிரதமர் தயாராக இருக்கிறார் என்றும் -

பல போராளிகள் சுட்டிக்காட்டி இவை பற்றி அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கருத்து என்னவென்று கேட்டனர். அவர்களுக்கு பதில் அளிக்கும் விதத்தில் ரவூப் ஹக்கீம் பின்வருமாறு கூறினார்:-

இன்றைய நிலையில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தித்தான் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

முஸ்லிம்களின் உரிமைகளைப் பேணி பாதுகாக்கும் விடயத்தில் அரசின் நிலைப்பாடு குறித்து சில முஸ்லிம் வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களையும் புலிகள் குறித்த அச்சங்களையும் தமக்கு சாதகமாக பயன்படுத்த சில சக்திகள் முயல்கின்றன.

ஒன்றைத் திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எவரும் முஸ்லிம்களின் முதுகிலே ஏறிச் சவாரி செய்யமுடியாது. பொது மக்கள் ஐக்கிய முன்னணியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் தாம் நினைத்ததைச் செய்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் இடமளிக்காது. அது எடுப்பார் கைப்பிள்ளை அல்ல என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

- (இப்படி ரவூப் ஹக்கீம் சொன்னார்.

கட்சி நிலைமை பற்றி ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கையில்:-

இன்று கட்சியில் உச்ச பீடம் (சுப்ரீம் கவுன்சில்) ஒன்றை அமைக்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

இதை அமைப்பதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் பலவீனப்படுத்தப்படும். ஏகத் தலைமையின் அதிகாரங்களைச் சுருக்குவதற்காக ஒரு கூட்டம் அபகரித்துக் கொள்ளவே இந்த ஆலோசனை. கட்சியின் தலைமையை ஒரு கைதியாக வைத்திருக்க விரும்புகிறார்கள். இதனால் முஸ்லிம் சமுதாயம் நன்மை அடைய முடியுமா? என்று கேட்டார்.

எம்முடன் இருக்கும் 7 எம்.பிக்களைப் போல எதிரணியில் இருக்கும் எம்.பிக்களையும் எம்மோடு இணைய நாம் அழைப்பு விடுத்திருக்கின்றோம். அதனை ஏற்று அவர்கள் வராவிட்டால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தவறினால் இக்கட்சியை காப்பாற்ற முடியாமல் போய்விடும் - என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார். (ஐ)

### மூவரைக் கைது செய்ய உத்தரவு

கொய்யாத்தோட்டம் சந்தியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பான மூன்று சந்தேக நபர்களையும் உடன் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா யாழ்.பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஆசீர்வாதம் டொமினிக் ஜீவா என்பவருடன் கூடச் சென்ற நடராசா தனராசா, பிரான்ஸிஸ் சேவியர், எமிலிஸ் றெட்கோமதி ஆகியோருக்கு சந்தேக நபர்களைத் தெரியும் என்று நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்தே இந்த உத்தரவை நீதிவான் விடுத்தார். திருநகரைச் சேர்ந்த மூவர் கொண்ட குழுவே தாக்குதல் நடத்தியதாக நேற்றைய மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து குறிப்பிட்ட நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3-51)

### கண்டி வீதி ஊடான

# நோயாளர் சேவையை செஞ். குழு நிறுத்தியது!

யாழ்ப்பாணம்,டிசெ.20

கண்டி வீதியூடாக நடத்தி வந்த நோயாளர் சேவையை நேற்று முதல் நிறுத்தியுள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யாழ்அலுவலகம் அறிவித்துள்ளது.

குடாநாட்டில் உள்ள மேலதிக சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களை தெற்கில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்லும சேவையை கடந்த 10 ஆண்டு காலமாக செஞ்சிலுவை அமைப்பு மேற்கொண்டு வந்தது என்றும் -

ஆரம்பத்தில் கப்பல் மூலமும் தொடர்ந்து கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் வாகன அணி மூலமும் இந்தச் சேவையை செஞ்சிலுவைக்குழு நடத்தி வந்தது என்று அந்த அமைப்பு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் தனியார் போக்குவரத்து வசதிகள் இருப்பதால் கண்டி வீதி ஊடான நோயாளர் சேவையை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# கிழக்கு மாகாண அபிவிருத்தி குறித்து இன்று கி.பல்கலையில் செயலமர்வு

### புலிகளின் பொருளாதார ஆலோசகர் வருகை

கொக்கட்டிச்சோலை,டிசெ.20

புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் நேற்று வன்னியிலிருந்து மட்டக்களப்புக்கு வருகை தந்தார். இன்று நடைபெறவுள்ள கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான குழுவின் இரண்டாவது செயலமர்வில் கலந்துகொள்வதற்காகவே அவர் மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இன்று காலை 10 மணிமுதல் இச்செயலமர்வு நடைபெறும். மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் நடைபெறும் இச்செயலமர்வில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த அரச திணைக்களங்களின் தலைவர்களும், அபிவிருத்தியுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக புலிகளின் பொருளாதார ஆலோசகர் மகேஸ்வரன் இங்கு விளக்கிக் கூறுவார். (ஐ)

# காரில் பயணம் செய்த வர்த்தகரும் சாரதியும் சுட்டுக் கொல்லப்பட்டனர்!

### ஹக்மன பகுதியில் சம்பவம்; பொலீஸ் விசாரணை

ஹக்மன பகுதியில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவம் ஒன்றில் இருவர் கொல்லப்பட்டனர். பியெல்ல பகுதியைச் சேர்ந்த ஒரு வர்த்தகரும அவரது சாரதியுமே கொல்லப்பட்டவர்கள் என்று ஹக்மன பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் அந்த வர்த்தகர் வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருக்கையில் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனக் கூறப்படுகின்றது.

சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே இருவரும் இறந்திருந்தனர் என்றும் ரி-56 ரக துப்பாக்கி ஒன்று பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.


ஹக்மன பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

# கர்நாடக இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,டிசெ.20

நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தானத்தின் பாலசம்ரக்ஷனகான சபா வழங்கும் சிறப்புக் கர்நாடக இசை நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணி முதல் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசைஞான திலகம் உ.இராதா கிருஷ்ணனின் வயலின் சோலோ சிறப்பு நிகழ்வாக நடைபெறும். லண்டனில் வசிக்கும் மிருதங்க வித்துவான் கலாவித்தகர் பரமசாமி கிருபாகரன் இதில் மிருதங்கக் கலைஞராக கலந்து கொள்கிறார். இவர் யாழ்.அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் பயின்று பின்னர் இந்தியாவில் மிருதங்க மாமேதை ஆர்.மணியிடமும் பயிற்சி பெற்றவர். (ஐ)



ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் திருவாதிரை உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. திருவாதிரை உற்சவத்தின் ஏழாம் நாளான நேற்றுமுன்தினம் சுவாமி ஏனைய மூர்த்திகளுடன் பவனி வந்த காட்சி.

இந்தியாவிலிருந்து வந்த தவில் கலைஞர்களுடன் உள்ளூர் நாதஸ்வர கலைஞர்களும் சேர்ந்து நாதஸ்வர இசைமழை பொழிவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள்:காரைநகர் செய்தியாளர்)*

# அடுத்த அதிபர் தேர்தலில் அல் கோர் போட்டியிடார்

வாஷிங்ரன்,டிசெ.20

2004ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று அமெரிக்காவின் முன்னாள் துணை அதிபர் அல் கோர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இரு தடவைகள் அதிபர் தேர்தலில் போட்டியிட்ட தனக்கு மற்றுமொரு தேர்தலில் போட்டியிட தனிப்பட்ட முறையில் சக்தியும் லட்சியமும் இருக்கின்றது. எனினும் எதிர் வரும் அதிபர் தேர்தலில் போட்டியிடுவது முறையானது எனத் தனக்குத் தோன்றவில்லை என்று கூறினார் அல் கோர்.



தனது குடும்ப உறுப்பினர்களுடன் நன்கு ஆலோசித்த பின்னரே தான் இந்த முடிவை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். சிபிஎஸ் என்ற தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அல் கோரின் இந்த அறிவிப்பு அவரது ஜனநாயகக் கட்சியினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அல் கோர் அரசியலில் இருந்து விலகினால் ஜனநாயகக் கட்சியை வழிநடத்திச் செல்லப்போவது யார்? அடுத்த தேர்தலில் தற்போதைய அதிபர் புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடக் கூடிய வலுவான வேட்பாளர் யார்? போன்ற கேள்விகள் எழுந்துள்ளன.

2000ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் புஷ்ஷிடம் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே அல் கோர் தோற்றுப்போனார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த தேர்தலில் தான் போட்டியிடாது போனாலும் கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர் வெற்றி பெறப் பாடுபடுவேன் என்றும் அல் கோர் தெரிவித்துள்ளார். (ம)

# தென்கொரியத் தேர்தலில் ரோ மூ ஹ்யூன் வெற்றி!



தென்கொரிய அதிபர் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று நடைபெற்றது. ஆளும் கட்சி வேட்பாளர் ரோ மூ ஹ்யூனுக்கும் எதிர்க்கட்சி வேட்பாளர் லீ ஹ்யூய் சாங்குக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. இறுதியில் லீயை விட ஒரு சதவீதத்துக்கும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் ரோ வெற்றி பெற்றார். ரோவுக்கு 47 லட்சத்து 88ஆயிரத்து 991 வாக்குகளையும் லீ 47 லட்சத்து 10ஆயிரத்து 614 வாக்குகளையும் பெற்றனர். நேற்றைய தேர்தலில் தனது பேரனை முதுகில் சுமந்தபடி வாக்களிக்கும் ஒரு வயோதிபரையும் வெற்றிபெற்ற ரோ மூ ஹ்யூனையும் படங்களில் காணலாம்.

# நெல்சன் மண்டேலா கண்டனம்

டேர்பன்,டிசெ.20

தென்னாபிரிக்க முன்னாள் அதிபரும் விடுதலைப் போராட்ட வீரருமான நெல்சன் மண்டேலா அமெரிக்காவுக்கு எதிராகக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பேரணியில் உரையாற்றிய அவர், ஈராக் மீது போர் தொடுக்க முயற்சிக்கும் அமெரிக்காவின் போக்கு கடும் கண்டனத்துக்கு உரியது என்றார். இந்த விடயத்தில் உலகத் தலைவர்களும் அமெரிக்காவைக் கண்டுகொள்ளாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விரைவில் அமெரிக்கா சென்று முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிடம் இருந்து விருது ஒன்றைப் பெறவுள்ளதாகத் தெரிவித்த அவர், அப்போது ஈராக் விவகாரம் தொடர்பாகத் தான் புஷ்ஷுடன் விவாதிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம)

# லொஸ்ஏஞ்சல்ஸில் திடீரென 700 ஈரானிய ஆண்கள் கைது!


நியூயோர்க்,டிசெ.20

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் தெற்குப் பகுதியான லொஸ்ஏன்சல்ஸில் சுமார் 700 இஸ்லாமிய ஆண்கள் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஈரானியர்கள்.

இவர்கள் அனைவரும் தீவிரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்பதற்காகக் கைதுசெய்யப்படவில்லை. மாறாகத் தமது வதிவிட உரிமைக்கான பதிவுகளை மேற்கொள்வதற்குத் தவறியதனாலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களின் முழுமையான விவரங்களை அதிகாரிகள் வெளியிடவில்லை. ஆனால், 500இற்கும் 700இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களது கடவுச்சீட்டுக்களில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும், அதனாலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் உள்ளூர் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் கூறினர்.

இந்தக் கைதுகள் அங்குள்ள ஈரானிய அமெரிக்கர்களிடம் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் வீதிகளில் இறங்கி உள்ளூர் குடிவரவு அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமது உறவினர்களை விடுவிக்குமாறு கோஷமிட்டு வருகின்றனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஈரானியர்கள்

"அடுத்தது என்ன? முகாம்களில் அடைக்கப்போகிறாயா?", "எங்களது தந்தையர்களையும் சகோதரர்களையும் கணவன்மார்களையும் பிள்ளைகளையும் விடுதலைசெய்" என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் தாங்கியுள்ளனர்.

அமெரிக்காவின் புதிய குடியுரிமைச் சட்டத்தின்படி ஈராக், ஈரான், லிபியா, சூடான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் இருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியவர்களில் 16 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தமது குடியுரிமை குறித்த பதிவுகளை கடந்த 16ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொண்டிருக்கவேண்டும்.

அவ்வாறு பதிவுசெய்யாமல் இருந்தவர்களே இப்போது கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தெற்குக் கலிபோர்னியாப் பகுதி ஈரானியர்கள் பெருமளவில் வசிக்கும் பகுதி என்பதால் அதிகாரிகள் முதலில் தமது நடவடிக்கையை அங்கு ஆரம்பித்துள்ளனர். இங்கு 6 லட்சம் ஈரானியர்கள் வசிக்கின்றனர்.

அமெரிக்காவில் வசிக்கும் ஏனைய முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்தவர்கள் தமது குடியுரிமை குறித்த பதிவுகளை மேற்கொள்வதற்கு வெவ்வேறு காலக்கெடுக்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)

## ஈராக் மீதான போருக்கு ஆஸி. உதவும்

சிட்னி,டிசெ.20

அமெரிக்கா தலைமையிலான பயங்கரவாதத்துக்கு எதிரான பன்னாட்டு அணி ஈராக் மீது போர் தொடுத்தால் அதற்கு உதவ ஆஸ்திரேலியா ஆயத்தமாகி வருகிறது என அந்நாட்டுப் பிரதமர் ஜோன் ஹவார்ட் தெரிவித்துள்ளார்.

போருக்கு ஆயத்தமாகுமாறு அடுத்த மாதத் தொடக்கத்தில் அதிபர் புஷ் தனது நட்பு நாடுகளிடம் கேட்டுக்கொள்வார் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் ஆஸ்திரேலிய மூத்த இராணுவ அதிகாரிகள் கூறினர். மார்ச் மாதத்தில் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருப்பதால் ஆஸ்திரேலிய அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

ஈராக்குடன் போர் மூண்டால் ஆஸ்திரேலிய சிறப்புப் படையினர் வளைகுடாப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று அங்குள்ள பத்திரிகைகள் கூறுகின்றன.

இதற்கிடையில் -

வளைகுடாப் பகுதியில் மீண்டும் ஒரு போர் ஏற்பட்டால் அதில் ஆஸ்திரேலியா பங்குபற்றக்கூடாது என்றும் -

ஈராக்கைத் தாக்க ஆஸ்திரேலியப் படையினரை அனுப்பக்கூடாது என்றும் -

கோரி அங்கு பெரும் எண்ணிக்கையானவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். எனினும் போர் தவிர்க்க முடியாதது என்று பிரதமர் ஹவார்ட் தெரிவித்தார். (ம)

## நெத்தன்யாகுவை சந்திக்க பிளயர் மறுப்பு

இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் முதற்தடவையாக வெளிநாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள நெத்தன்யாகுவைச் சந்தித்துப் பேச பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை ஆரம்பித்த நெத்தன்யாகு லண்டன் வந்திருந்தார். அவர் பிரிட்டிஷ் பிரதமரைச் சந்திக்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை பிளயர் நிராகரித்துவிட்டார் என்று தெரிகின்றது.

பலஸ்தீனப் பிரச்சினையில் தீவிர வலதுசாரிக் கொள்கையைப் பின்பற்றி வருபவரான நெத்தன்யாகுவைச் சந்திக்க மறுப்புத் தெரிவித்த அதே நேரம் இஸ்ரேலிய தொழிற்கட்சியின் அதிபர் தேர்தல் வேட்பாளர் அம்ராம் மிட்ஸ்னாவை லண்டன் வருமாறு பிளயர் அழைப்பு விடுத்துள்ளார். (ம)

## மத்திய கிழக்கு குறித்த

# மேற்குலக கொள்கைக்கு சிரியா கடும் கண்டனம்

மத்தியகிழக்கு குறித்த மேற்குலக நாடுகளின் கொள்கைகளை சிரிய அதிபர் பஷார் அல்-அஸாத் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

ஈராக்மீது மேற்கு நாடுகள் போர் தொடுப்பது தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கான தூண்டுதலாக இருக்கும் என்றும் அவர் சொன்னார்.

உலக அரங்கில்

உத்தியோகபூர்வ விஜயமாக பிரிட்டன் வந்துள்ள அவர் பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போதே மேற்கண்ட கண்டனத்தை அவர் வெளியிட்டார்.

அமெரிக்கா மத்திய கிழக்கில் உள்ள எண்ணெய் வளத்தின் மீதான ஆர்வம் காரணமாகவே ஈராக்கிடம் பேரழிவு தரும் ஆயுதங்கள் இருப்பதாகக் கூறிக்கொண்டு அதனைத் தாக்க முற்படுகின்றது என்றும் அஸாத் கூறினார்.

பலஸ்தீன அதிகாரசபை குறித்து மீளாய்வு செய்வதை அவர் நிராகரித்தார். அதற்கான திட்டங்களை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஐ.நா. மற்றும் ரஷ்யா ஆகியன வகுத்து வருகின்றன என்று பிரிட்டன் அறிவித்திருந்த கருத்துக் குறித்தும் அவர் கடுமையாகக் குறை கூறினார். (ம)



## கூறுவிலை கோரல்

சைவ வித்தியா விருத்திச் சங்க பண்ணை எல்லைக் கம்பிவேலி அமைத்தலுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

- விவரங்கள் சங்க அலுவலகத்தில்.
- கூறுவிலைகள் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி: **28.12.2002**

(சி-25505) சோ.பத்மநாதன் - *செயலாளர்.*


## யாழ்நகரில் பண்டிகைக்கால விற்பனை
**(LOBBY SALE)**

எல்லோராலும் விரும்பப்படும் கீர்த்திமிகு உயர்தர சேர்ட்டுக்களையும் சாரங்களையும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு!

Signature — PAKEEZA

சிக்னேச்சர் சேர்ட்டுக்கள் — பாகீஸா சாரங்கள்

வேறு ஆடைகளும் விற்பனைக்குண்டு

காலம்: *20/12/2002* முதல் *20/01/2003* வரை

இடம்: யாழ் உல்லாசப் பயணிகள் விடுதி, இல. 54, ஊனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)



எம்முடன் இணைந்தோர் உயர் கல்வி பெறுவோர்

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

## A/L கலை, வர்த்தகம் 2005

ஆரம்பம் 05.01.2003 காலை 8 மணி

யாழ்.நகரில் தனியிடத்தைப் பெற்ற தனித்துவமான எமது ஆசிரியர் குழு.

☆ அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளவும்

(C/25504)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

நேற்று (19.12.2002) வியாழக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது மின்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியில் பட்டம்பெற்ற -

திரு.சு.அருள்நேசன்

திரு.ஆ.சற்குணராஜேஸ்வரன்

என்பவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சென்.அன்ரனிஸ் சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகம் & கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு.

(11963)

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினம் பரராசசிங்கம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், காசாளர், சரஸ்வதி ஸ்ரோர்ஸ் - கொழும்பு)

### திருமதி பரராசசிங்கம் சந்திராதேவி

### செல்வி பரராசசிங்கம் தயாளினி (கவிதா)

(Accountant - John keel's Holding)

### செல்வி பரராசசிங்கம் சுஜாதா

(ஆசிரியை - கொ.ஹமீட் அல் ஹுசைனியா ம.வி.)

### செல்வன் பரராசசிங்கம் கஜன்

(பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவன்)

உடுவில் தெற்கு, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு-13, ஆதும் அலி கட்டடத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்களான இ.பரராசசிங்கம், திருமதி பரராசசிங்கம் சந்திராதேவி, தயாளினி (கவிதா), சுஜாதா, கஜன் ஆகியோர் 17.12.2002 செவ்வாயன்று அகால மரணமானார்கள்.

இரத்தினம் பரராசசிங்கம் அவர்கள் உடுவில் தெற்கு, பாலாவோடையைச் சேர்ந்த இரத்தினம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் அதே இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் அருமைத்துரையின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சூரியகுமாரன் மற்றும் புஸ்பராணி, வீரலஷ்சுமி, சந்திரகுமாரன் ஆகியோரின் அருமை மைத்துனரும் சுந்தரலிங்கம், ரஞ்சித்குமார் ஆகியோரின் அருமை சகலனும் கௌசலியா, சிவாஜினி ஆகியோரின் உடன்பிறவா சகோரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.12.2002) வியாழக்கிழமை 3.00 மணியளவில் கொட்டாஞ்சேனை, இல.222/6, பிக்கிரிங்ஸ் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொறளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.222/6, பிக்கிரிங்ஸ் வீதி,*
*கொட்டாஞ்சேனை.* T.P.: 01-330841 (11965)

தகவல்: வீ.சந்திரகுமாரன் (ராசன்)

### வீரசிங்கம் சூரியகுமாரன்

(உரிமையாளர் - சரஸ்வதி ஸ்ரோர்ஸ்)

உடுவில் தெற்கு, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான வீரசிங்கம் சூரியகுமாரன் 17.12.2002 செவ்வாய்க்கிழமை கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - சிவசக்தி (வை.சி.சி.கு. புகையிலை கடை உரிமையாளர்) தம்பதியினரின் அன்பு மருமகனும் கௌசல்யாவின் பாசமிகு கணவரும் கௌதமி, சூரியப்பிரசாந், சூரியபிரதீப், சூரியபிரசன்னா, சூரியபிரவீன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற சந்திராதேவி, புஸ்பராணி, வீரலஷ்சுமி, சந்திரகுமார் (சரஸ்வதி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பரராசசிங்கம் மற்றும் சுந்தரலிங்கம், ரஞ்சித்குமார், சிவாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான தயாளினி, சுஜாதா, கஜன் மற்றும் சுகந்தி, ஆர்த்தி, தனுசியா, திவாகரன் ஆகியோரின் மாமனாரும் விஸ்தீப், சௌமியா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நேற்று (19.12.2002) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் கொட்டாஞ்சேனை இல.222/6, பிக்கிரிங்ஸ் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொறளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.222/6, பிக்கிரிங்ஸ் வீதி,*
*கொட்டாஞ்சேனை.*
T.P.: 01-330841 (11965)

தகவல்: வீ.சந்திரகுமாரன் (ராசன் - சகோதரன்)

## சத்துணவு வழங்குதல்

சண்டிலிப்பாய்,டிசெ.20

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் போஷாக்கு உணவு வழங்கும் செயற்றிட்டத்தின்கீழ் போஷாக்கு குறைந்த 20 கர்ப்பிணித் தாய்மாருக்கும், 50 சிறுபிள்ளைகளுக்கும் இன்று வெள்ளி காலை 9மணிமுதல் மானிப்பாயிலுள்ள பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைத்து சத்துணவு வழங்கப்படவுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு குடும்ப சுகாதார சேவை அலுவலர்களால் போசாக்கு குறைந்தவர்கள் என சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கு ஜீராசாரம், பயறு ஆகிய சத்துணவுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)


அழகான- புதுமையான- மிகஉபயோகமான கையடக்கமான புத்தாண்டுப் பரிசு!

## ஆனந்தா கிழமை(மேசை)க் கலண்டர் - 2003

- அரச - வங்கி - வர்த்தக விடுமுறைகளும், அமாவாசை, பூரணை, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தி, பிரதோஷம், கார்த்திகை முதலிய விரத நாட்களும், முக்கியமான பண்டிகை நாட்களும் குறிக்கப் பெற்றுள்ளன.
- உங்கள் மேசைமீது வைத்து ஒரு கிழமைக்குரிய முக்கிய விடயங்களை ஒரே பார்வையில் பார்க்கலாம்!
- உபயோகிக்கும்போது இதன் அத்தியாவசியம் தெரியவரும்.
- இருவண்ணங்களில் கவர்ச்சிகரமான அச்சுப்பதிவு
- ஒரு கலண்டரின் விலை ரூபா 45/- மட்டுமே, விற்பனையாளருக்கு கழிவுண்டு

**உங்கள்தாபனப் பெயர் முகவரி பதித்து வாடிக்கையாளருக்கு அன்பளிப்பு வழங்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்க.**

ஆனந்தா அச்சகம் 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ். தொ.பே: *2222820*


# நல்லூர் பிரதேச சபை
## நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்கள்

### 1. 2003ஆம் ஆண்டிற்கான ஆதனவரி நல்லூர்/கொக்குவில்

1987ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.15இன்கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு சென்ற வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2003ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை 31.01.2003ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டிற்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15 வீதமும் ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்படவேண்டும்.

எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31.01.2003ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்றுச் சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*குறிப்பு:-*

01) 2002ஆம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகளைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

02) சேதமடைந்ததும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரி விலக்கிற்கான விண்ணப்பங்கள் 31.01.2003ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

03) வருடாந்த வரி பற்றிய அறிவுறுத்தலை ஏற்றுக்கொண்டு தங்கள் வரிகளை உரியகாலத்தில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### 2. 2003ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக்கான உரிமக் கட்டணத்தை 31.03.2003ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்களில் செலுத்தி வியாபார உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2003ஆம் திகதிக்கு பின்னர் வியாபார உத்தரவுப் பத்திரமின்றி எவ்வித வர்த்தக நிலையங்களும் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என அறியத்தருகின்றேன்.

### 3. 2003ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி உரிமம், வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகடு

2003ஆம் ஆண்டிற்கான உரிமத் தகடுகளை நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்களில் 31.03.2003ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### 4. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு 268இன்கீழ் பிரகாரமான அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் அனுமதியின்றி கட்டடங்கள், மதில்கள், மலசூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, அவற்றிற்கு நல்லூர் பிரதேச சபையினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்து முன் அங்கீகாரம் பெறல்வேண்டும். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என அறியத்தருகின்றேன்.

### 5. சந்தைக் குத்தகை

01) சந்தையில் விற்கப்படும் மொத்தக் காய்கறிகளுக்கு ரூபா 100/=இற்கு 3% அறவிடப்படல் வேண்டும. ரூபா 1,000/=இற்கு மேற்பட்டால் ஒவ்வொரு ரூபா 1,000/-இற்கும் 2% அறவிடப்படல்வேண்டும்.

02) பணத்தை நிறுவைத்தராசு மேடையில் வைத்து உடன் வழங்கல்வேண்டும்.

03) கழிவு விலைகள்

மரக்கறி வகைகள் - உறபாக் - 01 கிலோ
சாக்கு - 03 கிலோ

கிழங்கு வகைகளுக்கு (மரவள்ளி, கரணை) மட்டும்
50 கிலோவுக்கு உட்பட்டால் - 05 கிலோ
அதற்கு மேற்பட்டால்
10 கிலோவுக்கு - 01 கிலோ

04) தரத்தையும் விலையையும் வியாபாரிகள் நிறுவைத் தராசு இடத்தில் வைத்து தீர்மானிக்கப்பட்டு குத்தகை செலுத்தல்வேண்டும்.

05) வாழைக்குலைக்கு
10 கிலோவுக்கு உட்பட்டால் 3 கிலோவும் அதற்கு மேற்பட்டால் 5 கிலோவும் கழிவு, கழிக்கவேண்டும்.

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.*
*16.12.2002*

(சி-25499)

க.மணிபல்லவராஜன் ஜே.பி.யு.எம்.
*தலைவர், நல்லூர் பிரதேச சபை.*

# உதயன்

## பணி உணர்ந்து பணியாற்றுக!

"வெறும் கதிரைகளை மட்டும் அலங்கரிப்பவர்களாக இல்லாமல் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற முன்வரவேண்டும்".

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் இவ்வாறு அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

17 ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளின் உயிர்த்தியாகத்திலேயே இன்றைய சமாதான சூழல் உருவாகி இருக்கின்றது என்பதை அதிகாரிகள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்தச் சமாதான சூழ்நிலையை அவர்கள் சாதாரணமானதாக எண்ணிவிடக்கூடாது. இச் சமாதானச் சூழலின் பயனை - நமது மக்கள் - நமது சமூகம் பெருமளவில் பெற்றுக்கொள்ளத் தேவையான சகல நடவடிக்கைகளையும் அதிகாரிகள் வர்க்கம் சரிவர மேற்கொள்ளவேண்டும்; தமது கடமைகளை செவ்வனே ஆற்றவேண்டும் - இப்படி அவர் கோரியிருக்கின்றார்.

இனப்பிரச்சினையாலும் அதனால் வெடித்த கொடூரப் போரினாலும் தமிழர் தாயகம் அழிந்து போயிருப்பதையும் கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி போன்ற துறைகளில் நமது தாயகம் சுமார் 25 ஆண்டுகள் பின்தங்கியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். யுத்த காலத்திலும்கூட தேர்தல்களை - வாக்குகளை மட்டும் இலக்குவைத்து எமது பிரதேசங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டதை நாம் அனுபவத்தில் கண்டோம். காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய நிதி ஒதுக்கீடுகளை, அப்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாக மக்களுக்குப் பயன்தரும் திட்டங்களாக மாற்றுவதில் அதிகாரிகள் பலர் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்ததையும் வேறு சிலர் தமது 'பகல் கொள்ளைக்கு'ப் பயன்படுத்தியதையும் கண்டோம்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. அரசியல், அதிகார வர்க்கம் உட்பட - சமூகத்தின் சகல தரப்பினரும் வேறுபாடுகளை மறந்து நமது பிரதேசத்தில், தாயகத்தின் விருத்திக்கு ஒன்றிணைந்து தீவிரத்துடன் சேவையாற்றவேண்டிய காலம் கனிந்திருக்கின்றது.

ஏற்கனவே போரினால் அழிந்துபோயிருக்கும் நமது தாயகத்தின் மறுவாழ்வுப் பணிகளுக்காக உலக நாடுகள் பல உதவ முன்வந்துள்ளன. வெறும் உதவிகளை வழங்கிவிட்டு அந்நாடுகள் வாளாவிருக்கப் போவதில்லை. அந்த உதவிகள் களத்தில் மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் செயற்றிட்டங்களாக பரிணமிக்கின்றனவா என்பதை கண்கொத்திப் பாம்பு போன்று உன்னிப்பாக அவை கண்காணிக்கும் என்பது நிச்சயம்.

ஏற்கனவே வழங்கப்பட்ட உதவிகள் களத்தில் நிறைவேற்றப்படுவதில்தான் எதிர்கால உதவிகள் கிட்டுவது தங்கியிருக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. 'அதிகாரிகளின் அசமந்தம்', செயற்றிறனின்மை மற்றும் லஞ்சம், 'சுத்துமாத்து'ப் போக்கு என்பன உதவித் திட்டங்களை நல்லமுறையில் நடைமுறைப்படுத்த விடாமல் பின்னடையச் செய்துவிடும்.

அத்தகைய நிலைமை அதிகாரிகளை மட்டுமல்லாமல் இத்தகைய திட்டங்களின் அமுலாக்கத்தைக் கண்காணிக்கவேண்டிய அரசியல் தலைமைத்துவத்தின் திறமையையும் கேள்விக்குள்ளாக்கிவிடும்.

ஆகவே, தற்போதைய அரசியல் நிலைமை, அரசியல் தலைமைத்துவத்தின் எதிர்பார்ப்பு, அந்த எதிர்பார்ப்பை பூர்த்திசெய்யத்தக்க வகையில் ஒழுங்குமுறையுடன் பணியாற்றத் தவறினால் ஏற்படக்கூடிய விளைவுகள் போன்ற பல விடயங்களையும் அதிகாரிகள் தரப்பு கவனத்திற் எடுத்துச் செயலாற்றவேண்டும்.

மொத்தத்தில் அபிவிருத்திப் பணிகளைப் பொறுத்தவரை மக்களுக்கும் அரசியல் தலைமைத்துவத்துக்கும் இடையில் செயற்படவேண்டிய அதிகாரிகள், தங்கள் பணியுணர்ந்து செயலாற்ற வேண்டிய காலம் இது என்பதைப் புரிந்துகொண்டால் நல்லது.

# கட்டுப்பாடற்ற அபிவிருத்தி சுற்றுச்சூழலைப் பாதிக்கும்

## - பொறியியலாளர் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.20

குடாநாட்டில் இப்போது அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. கட்டுப்பாடற்ற அபிவிருத்தி சூழலைப் பாதிக்கும். அதனால் மக்கள் பாதிப்படைவர். எனவே, சுற்றுச்சூழலைப் பெரிதும் கவனத்திற்கொண்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம்.

- இவ்வாறு தெரிவித்தார் பொறியியலாளர் என்.தேவராஜன்.

இலங்கைத் தேசிய நிர்மாண சங்க வடமாகாணக் கிளையின் வருடாந்த மாநாட்டில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் ஏற்படும் சமாதானத்தில் அபிவிருத்தி ஒரு முக்கிய அம்சமாகும். ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதுதான் அபிவிருத்தியின் முக்கிய நோக்கம். பொதுமக்களின் வாழ்க்கைக்கு மிக முக்கியமானது என்னவென்றால் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பர்.

நோயற்ற வாழ்விற்கு எமக்கு முதல் தேவை சுத்தமான காற்று. இரண்டாவதாக சுத்தமான தண்ணீர் தேவை. மூன்றாவதாக உணவு. அதன் பின்னர்தான் உடை, வீடு, கல்வி, தொழில் போன்றவை.

சுத்தமான காற்றுக்கும் தண்ணீருக்கும் சுற்றாடல் பிரதானமாகிறது. பிழையான அல்லது கட்டுப்பாடற்ற அபிவிருத்தி எமது சுற்றாடலைப் பாதிக்கும். பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள் வாகனங்களும் இயந்திரங்களும் காற்றை அசுத்தப்படுத்துகின்றன. இதனால் இவ்வாகனங்களைக் கட்டுப்படுத்தவேண்டும்.

கட்டுப்பாடற்ற அபிவிருத்திக்கு உதாரணமாக யாழ்.நகர் பஸ் நிலையத்தைக் குறிப்பிடலாம். இந்த பஸ் நிலையம் நகரின் மத்தியில் யாழ்.வைத்தியசாலைக்கும் யாழ்.பொதுச் சந்தைக்கும் இடையிலிருந்து சனநெருக்கடியை ஏற்படுத்துவதுடன், சுற்றாடல் பாதிப்பையுண்டாக்கிறது. இந்த பஸ்நிலையத்தை ஒரு சிறுதூரத்தில் சனநெருக்கம் குறைந்த இடத்தில் அமைப்பதே பொருத்தமாகும். வாகன விபத்துக்களும் குறையும்.

முற்போக்கான அபிவிருத்தியடைந்த தேசங்களில் வீதிகள் அமைக்கும்போது அவ்வீதிகளில் நடப்போருக்குத்தான் முதலில் முக்கியத்துவம் கொடுப்பார்கள். இரண்டாவதாக சைக்கிள்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பார்கள். பஸ், லொறி போன்ற பெரிய வாகனங்கள் நகரின் மத்தியில் பிரதான குறைவாகவே கருதப்படும்.

சுற்றாடல் பாதுகாப்பிற்காக அபிவிருத்தியடைந்த பல நாடுகள் மக்களை வீதியில் நடக்கவும் சைக்கிள்களை ஓடவும் தூண்டுகிறார்கள். ஏனெனில், பெரிய வாகனங்கள் காற்றை அசுத்தப்படுத்துகின்றன. ஆனால், இங்குள்ள வீதிகளில் நடப்போர்க்கும் துவிச்சக்கரவண்டி ஓடுவோர்க்கும் மதிப்பில்லை. பெரிய வாகனங்களில் செல்வோர் நடப்பவர்களுக்கு புழுதி அல்லது சேறு எற்றிச்செல்வார்கள். இது ஒரு நாகரிகமற்ற செயல்.

நகரின் மத்தியில் லொறிகள் பகல் நேரங்களில் ஓட அனுமதிக்கக்கூடாது. இரவு நேரங்களில் மட்டுமே லொறிகள் நகரின் மத்தியில் பொருள்களை இறக்கி, ஏற்ற அனுமதிக்கப்பட்டால் சுற்றாடல் பாதிப்புக் குறையும்.

தாவர வளர்ச்சிக்கும், மிருகங்கள், மனிதர்கள், பறவைகள் அனைத்திற்கும் தண்ணீரே மிக முக்கியமான தேவையாக இருக்கின்றது. நோயற்ற வாழ்விற்கு சுத்தமான தண்ணீர் தேவை. வடபகுதியில் கிணற்றுநீரே குடிப்பதற்கும் உணவுற்பத்திக்கும் அதிகம் பயன்படுகிறது. மழைநீர் நிலத்தின்கீழ் ஊறி எமக்கு வடிக்கட்டிய நீராகக் கிடைக்கிறது. இதனால் எமது மண்ணைச் சுத்தமாக வைத்திருப்பது எமது கடமை.

சன நெருக்கடி மிகுந்த பகுதிகளில் Septic Tanks எனப்படும் மலநீர்க்கூடங்களைக் கட்டி அவற்றை மாதமொருமுறை இறைக்கவேண்டும்.

தற்போதுள்ள Soakage Pits கிணற்றுநீரை அசுத்தப்படுத்தும். நீர் அசுத்தமானால் பலவித வயிற்று நோய்கள் ஏற்படலாம்.

கிணறுகள் கோடை காலங்களில் வற்றாமலிருப்பதற்காகவே குளங்கள் வெட்டப்பட்டன. மழைநீரில் ஒருபகுதி மண்ணில் ஊறுகிறது. இன்னொரு சிறு பகுதி குளங்களில் சேர்கின்றது. மிகுதி கடலில் சேர்கிறது. நாம் கடலில் போகும் நீரின் பகுதியைக் குறைத்து குளங்களில் சேர்த்தால் கோடை காலங்களில் கிணற்றுநீர் வற்றாது. கடலுப்பு நீர் நிலநீருடன் கலப்பதையும் இக்குளங்கள் தடைசெய்கின்றன. யாழ்.குடாநாட்டிலுள்ள பல குளங்களின் உருவாக்கத்துக்கு ஒல்லாந்தர் காரணமாகவுள்ளார்கள். தண்ணீருடன் சம்பந்தப்பட்ட கட்டுவேலைகளுக்கு இவ்வுலகத்தில் ஒல்லாந்தரே சிறந்தவர்கள். ஒல்லாந்து நாட்டின் ஒருபகுதி கடல்நீர் மட்டத்தின்கீழ் அமைந்துள்ளது. இதன்காரணமாக அவர்கள் தண்ணீர்ப் பொறியியலில் வல்லமை பெற்றார்கள்.

நாம் எமது குளங்களைச் சுத்தப்படுத்திப் பாதுகாக்கவேண்டும். நமது மூதாதையர் படித்த பாட்டொன்று என் நினைவிற்கு வருகின்றது. "மழையே மழையே மெத்தப்பெய் வண்ணான்குளம் தெறிக்கப் பெய். புட்டியும் சாம்பலும் பறக்கப் பெய்" ஐம்பதாண்டுகளுக்கு முன் சலவைத் தொழிலாளர்கள் குளங்களிலே உடைகளைக் கழுவினர். இக்குளங்களிலே உடைகள் சுத்தப்படுத்த ஏற்ற நீர் இருந்தது. ஆனால், தற்போதைய குளங்கள் அசுத்தப்பட்டுவிட்டன. எமது வருங்கால சமுதாயத்தின் நலங்கருதி நாம் குளங்களைப் பேணுதல் வேண்டும்.

நோயற்ற வாழ்விற்கு நாம் எறியும் குப்பைகளைக் குறைத்தல் வேண்டும். குப்பைகளைச் சேர்த்து மண்ணிற்குப் பசளையாக்கத்தக்க வகையில் அவற்றைப் புதைத்தல் நன்று.

பிளாஸ்டிக் பொருள்கள் நமது மண்ணைப் பாதிக்கக்கூடியவை. ஆகவே, பிளாஸ்டிக் பாவனைகள் தடைசெய்யப்படவேண்டும். நாம் எமது அபிவிருத்தியைப் பொருளாதார ரீதியில் மட்டு மில்லாமல் விஞ்ஞான ரீதியிலும் சமூக ரீதியிலும் சிந்திக்க வேண்டும்.

எமது நாட்டை வேறு உலக நாடுகளுடன் ஒப்பிடுவதற்கும் பிற நாடுகளின் அனுபவத்தையறிந்து நம்நாட்டை முன்னேற்றுவதற்கும் ஆங்கிலக் கல்வி பயன்படும்.

ஜப்பானும் ஜேர்மனியும் இரண்டாவது உலக யுத்தத்தில் தோல்வியடைந்து பலத்த சேதங்களையும் உயிரிழப்புக்களையும் அடைந்தன. ஆனால், தற்போது அவை பொருளாதார வளர்ச்சியில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளன. அதேபோல வடபகுதியும் தற்போதைய அழிவிலிருந்து நீங்கி முன்னேற்றமடைய பல வழிகளுண்டு - என்றார். (ம)

### கதிரைகளை அலங்கரிப்பவர்களாக இல்லாமல்

# அர்ப்பணிப்புடன் சேவையாற்ற அதிகாரிகள் முன்வரவேண்டும்

## சேனையூரில் துரைரெட்ணசிங்கம் எம்.பி. உரை

திருகோணமலை,டிசெ.20

பதினேழாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளின் உயிர்த்தியாகத்தாலேயே இன்று சமாதானச் சூழல் உருவானது. இதனை அரச உயர் அதிகாரிகள் சாதாரணமாக எண்ணிவிடக்கூடாது. அதேவேளை, அந்த அதிகாரிகள் கதிரைகளை அலங்கரிப்பவர்களாக இருக்காமல் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதற்கு முன்வருபவர்களாக இருக்கவேண்டும்.

- இவ்வாறு திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் சேனையூர் சனசமூக நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசியபோது குறிப்பிட்டார்.

இந்நிகழ்வு மூதூர் பிரதேச செயலாளர் ஏ.நடராசா தலைமையில் நடைபெற்றது.

துரைரெட்ணசிங்கம் எம்.பி. அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

அரச உயர் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படும் காலம் வந்துவிட்டது. மக்களுக்காகச் சேவை செய்வதற்கு அதிகாரிகள் முன்வரவேண்டும்.

சுமார் 17 ஆயிரம் போராளிகளின் உயிர்த்தியாகத்தால் உருவானதே சமாதானச்சூழல். அதன் பயனைச் சரிவரப் பெறுவதற்கு கடமைகள் சரியாக நிறைவேற்றப்படவேண்டும். இப்போது சில அதிகாரிகள் உற்சாகத்துடன் பணிபுரிகின்றனர்.

அதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அதிகாரிகள் சிலர் அசமந்தப்போக்குடன் செயற்படுகின்றனர். சாக்குப்போக்குகள் சொல்லி பல நல்ல திட்டங்களைத் தட்டிக்கழிக்கும் அதிகாரிகளை நாம் அறிவோம்.

சுமார் 25 வருடங்கள் கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி போன்ற துறைகளில் பின்தங்கியுள்ளோம். இதில் முன்னேற்றம் காண்பதற்கும், இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கும் அதிகாரிகள் ஒவ்வொருவரும் நேரம் காலம் பார்க்காது அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வரவேண்டும்.

இதன்பொருட்டு மாவட்ட உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச எண்ணியுள்ளோம்.

கதிரைகள் மக்களுக்குச் சேவை செய்வதற்காக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டவை. அந்த நிலைப்பாடு மாறும் பட்சத்தில் அதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்று திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் - என்று துரைரெட்ணசிங்கம் எம்.பி. கூறினார். (ம)

### நாளை

மார்கழி 06
சனிக்கிழமை
(21.12.2002)
திதி : துதியை
பின்னிரவு 1.28 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
காலை 7.40 வரை.
உதயத்தின் முன்
நடேசர் ஆருத்திரா தரிசனம்
சுபநேரம் : 3.24 - 4.54
ராகுகாலம் : 9.24 - 10.54
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பருத்த உடல் பெற்றிருப்பது உண்மையான வலிமை ஆகாது. திண்ணிய மனவலிமையே சிறந்த வலிமை என்று கொள்ளப்படும்.

### பருத்தித்துறை 2ஆம் குறுக்குத்தெருப் பகுதியில்

# படையினரின் அணையால் வெள்ளம் வடியமுடியாத நிலை

வடமராட்சி,டிசெ.20

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருவின் தெணி என்ற பகுதியில் அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் கடலுக்குள் செல்லமுடியாது பாதுகாப்பணை தடையாகவுள்ளதால் அப்பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் பாதுகாப்பு அணையை நீக்கி வெள்ளம் கடலுக்குள் வடிந்து செல்வதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்டவர்களுடன் பேசிச் செய்துதருமாறு தெணிப்பகுதி குடியிருப்பாளர்கள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் [illegible]. (ம-[illegible])

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடும் காணியும் விற்பனைக்கு

3 1/2 பரப்புக் காணியில் நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த வீடும் 2 1/2 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.193, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
**T.P 01-728912 , 0777-630167.**
(11976)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 75ஆம் ஆண்டு, உத்தராடம் (5′6″ உயரம்) மணமகனுக்கு (தைமாதம் இத்தாலியிலிருந்து வருகின்றார்) அழகான, படித்த மணமகள் தேவை. தொடர்பு: கல்யாணமாலை திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்;67/A, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13. T.P. 338162 Fax 338161
(98127)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அவிட்டம் 3ஆம்பாதம், 1978இல் பிறந்த, 8இல் செவ்வாய், பாவம் 65 உடைய மணமகளுக்கு படித்த உள்நாடு அல்லது வெளிநாட்டில் தொழில்புரியும் மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விளம்பர இல. 1726, மே/பா உதயன்.
(11967)

## இறைச்சிக்கோழி தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்லவிலை தரப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (11910)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. உயிருடன் 1kg 160/- இற்கு கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு (பூங்கனிச் சோலைக்கும் முடமாவடிச் சந்திக்கும் இடையில்).
(11973)

## தேவை

கௌரவமான உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. வண்ணார்பண்ணை, கந்தர்மடம் பகுதி விரும்பத்தக்கது. 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். T.P 222-3081 (சி-25498)

## மணமக்கள் தேவை

கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகளிலுள்ளவாகளினதும் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், அரச, தனியாா துறை உத்தியோகத்தர்கள் மற்றும் தராதரமுள்ளவர்களினதும் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. தொடர்பு: கல்யாணமாலை திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம்; 67/A, ஆட்டுப் பட்டித் தெரு, கொழும்பு-13. T.P. 338162 Fax338161
(95128)

## மிதிவெடியில் சிக்கிய பசுமாடு படுகாயம்

சண்டிலிப்பாய், டிசெ.20

பண்டத்தரிப்பு வயற்காணி ஒன்றில் மேய்ச்சலுக்குக் கட்டியிருந்த பசு மாடு ஒன்று நேற்றுமுன்தினம் மாலை மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்தது. வன்னியிலிருந்து அண்மையில் இங்கு வந்து மீளக் குடியேறிய விவசாயி ஒருவருக்குச் சொந்தமான - சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான - பசுமாடே இவ்வாறு காலில் காயமடைந்துள்ளது.

இப்பகுதியில் முன்னர் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட மண் அணைக்கு சமீபமாக புதைக்கப்பட்ட மிதிவெடிகளில் சிக்கி ஏற்கனவே பல மாடுகள் காயமடைந்தும் இறந்தும் உள்ளன. (ஐ-135)

## MACHINE MINDER தேவை

PLATEN MACHINE MINDER தேவை.
அனுபவமுடையவர்கள் மட்டும் நேரில் வரவும்.
**பாரதி பதிப்பகம்**
(சி-25488) 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

We Serve

## மாபெரும் இலவச மருத்துவ முகாம்

### கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில்

**21.12.2002 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.2.00 மணிவரை நடைபெறும்.**

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் சின்மயா மிஷன் கொழும்பு, மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் மாபெரும் மருத்துவ முகாமை நடத்தவுள்ளது. இம்முகாமிற்கு காது, மூக்கு, தொண்டை, புற்றுநோய், குழந்தை வைத்திய, பொது வைத்திய, இயன் வைத்திய, சத்திர சிகிச்சை நிபுணர்கள் உட்பட 14 வைத்திய கலாநிதிகள், Dr. வீரசேன தலைமையில் சமுகமளிக்க உள்ளனர். நட மாடும் இரத்த பரிசோதனைகள், ஈ.சீ.ஜீ. ஆகிய பரிசோத னைகள் இலவசமாக நடத்தப்படும். இலவசமாக மருந்து களும் வழங்கப்படும். இந்த இலவச மருத்துவ முகாமில் பயன்பெற விரும்புவோர் மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழக காரியாலயத்தில் இன்று (20:12.2002) வெள்ளிக் கிழமை மு.ப. 9.00மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கும் இடையில் பெயர்களைப் பதிவுசெய்யவும்.

லயன் மா.தியாகராசா — தலைவர்.
லயன் செ.கேசவராஜன் — செயலாளர்.
லயன் செல்வி Dr.க.ஈஸ்வரி — செயற்றிட்ட தலைவர்.
(11964)

## மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலணையைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வதிவிடமாகக் கொண்டவரும் யாழ். இந்துவின் பழைய மாணவரும், வண்.நாவலர் மகா வித்தியாலய முன்னாள் சிரேஷ்ட ஆசிரியரும், கீரிப்பிள்ளையார் தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் தலைவருமான -

**திரு.சின்னத்தம்பி சோமசுந்தரம் சண்முகரத்தினம்**

அவர்கள் யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி S.இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுள்ளார்.

இவர் நீண்டகாலம் நலமுடன் வாழ்ந்து மேலும் பல சமூக சேவைசெய்து வாழ வேண்டும என கீரிப்பிள்ளையார் தாழ் பணிந்து வேண்டிநிற்கின்றோம்.

*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (11969)

திரு. மகேந்திரன் குடும்பம்,
திருமதி பாலசிங்கம் குடும்பம்,
உறவினர்கள், அயலவர்கள்.

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## கலாசாலை வீதி, திருநெல்வேலி
## யாழ்ப்பாணம், இலங்கை

### ஜப்பானிய மொழிக் கற்கை நெறி - 2003

மேற்படி ஜப்பானிய மொழிக் கற்கை நெறிமூலம் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு ஜப்பானிய மொழியை ஒரு பாடமாகத் தெரிவுசெய்ய விரும்புவோரிடமிருந்து வேண்டுகைகள் ஏற்றுக் கொள்ளப்படும். வேண்டுகையாளர்கள் தங்கள் விவரங்களை நேரில் சமர்ப்பிக்கலாம்.

**வேண்டுகைகளுக்கான முடிவு திகதி: 10.01.2003**

கற்கைநெறிக் காலம் : 10 மாதங்கள்
கற்றைநெறிமூலம் : தமிழ்
பதிவுக் கட்டணம் : ரூபா 100/-
கற்கைநெறிக் கட்டணம்: ரூபா 3000/-(10 தவணைகளில்)

எதிர்வரும் 20.01.2003 இலிருந்து வகுப்புகள் தொடங்கும் என்பதை அறியத்தருகிறோம்.


★ 2003 க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்குரிய வகுப்புகள் 15.01.2003 அன்று தொடங்கும் என்பதனை அறியத்தருகிறோம்.

*செயலாளர்* திரு.சோ.பத்மநாதன். (C/25474) *கல்வித்திட்டப் பணிப்பாளர்* திரு.பொ.அரவிந்தன்.

## அந்தியேட்டி அழைப்பு

சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

தோற்றம் 20 - 05 - 1933



மறைவு 21 - 11 - 2002

### அமரர் சின்னத்தம்பி துரைராசா

(கிருஷ்ணபிள்ளை)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (21.12.2002) சனிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும். மேற்படி கிரியைகளிலும் நண்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"கனகம்மா இல்லம்"*
*கணேஸ் அறிவாலய ஒழுங்கை,*
*கரவெட்டி மேற்கு, கரவெட்டி.*

திரு.திருமதி அருந்தவசீலன்
(மகன் - மருமகள்).
குடும்பத்தினர் (11767)

## எங்கள் மகத்தான சேவைகள்

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் ஓரேஞ், அப்பிள் வகைகளையும் கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் முட்டைகளையும் எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.நகரிலிருந்து **V.R.D.** ரவல்ஸ் மூலமாக பொதிகளைக் கொண்டு செல்வதற்கும் இன்றே நாடுங்கள்:

### வேளாங்கண்ணி ஸ்ரோர்ஸ்

பெரியகடை வீதி,
(மரக்கறி சந்தை, **R.B** புக்கிங் சென்ரர் அருகில் யாழ்ப்பாணம்)
தொலைபேசி இல. 0777-715691

யாழ்.நகரிலிருந்து கொழும்பு, வவுனியா, திருமலை, மட்டக்களப்பு செல்வதற்கு சொகுசு பஸ் மற்றும் வான் ஆசனங்களைப் பதிவுசெய்வதற்கு யாழ்.நகரில்

### ஆர்.பி.பஸ் ஆசனப் பதிவகம்

வயிரவர் கோயில் அருகில்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

T.P. 0777-737368

15, பெரியகடை வீதி,
(மரக்கறி சந்தை அருகில்)
யாழ்ப்பாணம்.

(சி-25497)



## யுத்தம் புரிந்தவர்கள் கைலாகு கொடுக்கின்றனர்:

# அப்பாவிகள் நாம் அலைந்து திரிகிறோம் மீளக் குடியமர நடவடிக்கை எடுங்கள்!

## அரச அதிபருக்கு பொன்னாலை மக்கள் மகஜர்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யுத்தத்தில் ஈடுபட்டோர் கைலாகு கொடுக்கின்றனர். ஆனால், அப்பாவி மக்கள் மீளக்குடியமர முடியாது அலைகின்றனர். ஆகவே, நாம் எமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இடம்பெயர்ந்த பொன்னாலைக்கிராம மக்கள் இவ்வாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பொன்னாலையில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களின் பிரதிநிதிகள் கையெழுத்திட்ட கோரிக்கை மகஜரை பொன்னாலை மக்கள் ஒன்றியம் அரச அதிபருக்கு அனுப்பியுள்ளது. மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுளளதாவது:-

நாட்டில் இனப்பிரச்சினையால் ஏற்பட்ட கொடிய யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாம் இடம்பெயர்ந்தோம். 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கை இராணுவத்தினர் வசம் வந்த பின்னர் குடாநாட்டு மக்களிற் சில பகுதியினர் படிப்படியாக தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்தனர். இதேபோல எமது பொன்னாலைக கிராமத்தின் பிரதான வீதிப் பகுதியிலும் சில குடும்பங்கள் குடியேறின. ஆனால், பொன்னாலை கிருஷ்ணன் கோயிலடியை அண்டிக் குடியிருந்த பல நூற்றுக் கணக்கான குடும்பங்களாகிய நாம் இதுவரை எமது சொந்த இடத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. காரணம் என்னவெனில் எமது பகுதி கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது.

தற்போதைய சமாதானச் சூழலிலாவது எம்மை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் க.சண்முகநாதன், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் ஆகியோருக்கு மகஜர்கள் கொடுத்தோம். ஏழு மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை அவர்கள் எமக்கு எந்தவிதமான பதிலையும் தரவில்லை; இதுபற்றி எங்காவது அவர்கள் பேசியதாகவும் நாம் அறியவில்லை.

பொன்னாலைக் கிராமத்தைச் சேர்ந்த எமது மக்களிற் பெரும்பாலானோர் அயற்கிராமங்களிலுள்ள வன்னிக்குச் சென்றோரின் வீடுகளிலேயே இதுவரை தங்கியிருந்தனர். தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் வன்னிக்கு சென்றோரின் வீடுகளிலேயே இதுவரை தங்கியிருந்தனர். தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் வன்னிக்குச் சென்ற மக்களும் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள. அவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறும் படி கூறுகிறார்கள். இந்நிலையில் நாம் எங்கு செல்வது? கடும் யுதத்தில் ஈடுபட்ட இருதரப்பினரும் கைலாகு கொடுத்துச் சமாதானப் பேச்சில் ஈடுபடுகிறார்கள். அங்கே மீள்குடியமர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படுகின்றது. ஆனால், அதை நிறைவேற்றுவதில் மந்தநிலை காணப்படுகின்றது. இதனால், ஏதுமறியாத அப்பாவி மக்கள் வாழ இடமிருந்தும் வாழ வழியின்றி அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க - பொன்னாலை கடற்படையினர் அவ்வாறே - இருக்க எம்மை மீளக்குடியமர்த்துவதற்குச் சங்கானை பிரதேச செயலகம் தற்போது நடவடிக்கை எடுப்பதாக அறிகின்றோம்.

எமது மக்களின் வாழ்க்கை முறையைத் தங்களுக்கு விளக்கிக்கூற முற்படுகின்றோம். இரவுநேர கடற்றொழிலும் சீவல் தொழிலுமே எமது பிரதான தொழில்களாகும். இரவில் குடும்பத் தலைவர்களான ஆண்கள் தொழிலுக்கு சென்ற பின்னர் பெண்களும் குழந்தைகளும் வீட்டில் தனிமையில் இருக்கின்ற நிலை. அத்தோடு, சீவல் தொழிலுக்கான சிறந்த பனை வளமும் கிராமத்தின் மேற்குப் பகுதியில் குடிமனைகள் குறைவான இடங்களிலேயே காணப்படுகின்றது. எமது கிராமத்தை ஊடறுத்து திருவடிநிலை வரை மிகப்பெரிய மண் அணை (பண்ட்) போடப்பட்டுள்ளது. கிராமத்தின் எல்லைப்புறங்களிலும் உட்புறங்களிலும் முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான எமது கிராமத்தின் சுற்றுப்புறச்சூழல் அமைவு மற்றும் தொழில் அடிப்படையில் கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வாழ்வதென்பது முற்றிலும் நினைத்துப்பார்க்கமுடியாத ஒரு காரியம்.

கடந்த பன்னிரண்டு வருடங்களாக இருக்க இடமின்றிப் பட்டதுன்பங்கள் போதும் என்ற நிலையில் யாழ்.குடாநாட்டின் பல இடங்களிலும் பரந்து வாழும் எமது பொன்னாலை மக்கள் கடந்த 8ஆம் திகதி ஒன்றுகூடி எடுத்த தீர்மானங்கள் வருமாறு:-

☆பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலைக்கு முன்னாலும் வரதராஜப் பெருமாள் ஆலயச்சுற்றாடலிலும் கிராமத்திலும் ஆங்காங்கே இருக்கின்ற பிரதானமுகாம்கள் உட்படச் சிறுகாவலரண்கள் அனைத்தும் உடனடியாக அகற்றப்படவேண்டும்.

☆வரதராஜப்பெருமாள் ஆலயத்திலிருந்து திருவடிநிலை வரையுள்ள பிரதான முகாம்கள் உட்படச் சிறு காவல்ரண்கள் அனைத்தும் திருவடிநிலைக்கு அப்பால் பின்னகர்த்தப்படவேண்டும்.

☆பொன்னாலைக் கிராமத்தை ஊடறுத்து திருவடிநிலைவரை நீண்டு செல்கின்ற பிரதான மண் அணை (பண்ட்) மற்றும் முட்கம்பி வேலிகள் என்பன கடற்படையினரால் அகற்றித் தரப்படவேண்டும்.

☆நெல்லியானில் இருக்கின்ற கடற்டை முகாம் அகற்றப்படுவதன் மூலம் சுழிபுரம் சந்தியிலிருந்து நெல்லியானூடாகப் பொன்னாலைக்குச் செல்கின்ற வீதி திறக்கப்படவேண்டும். அத்தோடு பொன்னாலையூடாகக் கீரிமலைக்குச் செல்வதற்கு பொதுமக்களுக்கு கடற்படை அனுமதியளிகக வேண்டும்.

☆பொன்னாலையில் பெரும்பான்மையாக மீனவக்குடும்பங்கள் வாழ்வதால் கடற்றொழிலில் ஈடுபட எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கக்கூடாது என்பதுடன், பாஸ் நடைமுறைகள் முற்றாக நீக்கப்படவேண்டும்.

☆மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் வயல் வெளிகளிலும் மிதிவெடிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அரச அதிபராகிய தாங்கள் அரச உயர்மட்ட அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பதன்மூலம் மேற்படி எமது கோரிக்கைகள் விரைவாக நிறைவேற ஆவன செய்வீர்கள் என நம்புகின்றோம். இக்கோரிக்கைகளுக்கு சாதகமான பதில எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்காத பட்சத்தில் எமது இலக்கினை அடையும் வரை தொடரான சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுப்பது தவிர்க்க முடியாததாகும் என்பதை மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(ஒ)

## விவசாயிகளுக்கு மாதிரி பயிற்சி முகாம்

வலிகாமம் தெற்கு,டிசெ.20

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதிரி விவசாய பயிற்சி முகாம்கள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச கெயர் நிறுவனத்தின் ஆதரவுடன் பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய இடங்களில் இவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாதிரி பயிற்சி முகாமிலும் தலா முப்பது விவசாயிகளுக்கு விவசாயப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சிநெறி மூன்று மாத காலத்திற்கு நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நெற்செய்கை மற்றும் மேட்டுநில மரக்கறி செய்கை பற்றிய பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

செயற்கை உரம் போடாமல் இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி அதிக விளைச்சலை பெறுவது தொடர்பாகவும் -

இரசாயனக் கிருமிநாசினிகளுக்குப் பதிலாக உள்ளூரில் கிடைக்கும் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் -

இங்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஓ-152)

# மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களிலேயே அரசியல் தீர்வு குறித்து ஆராய்வோம்

## மாலைதீவு தொலைக்காட்சிப் பேட்டியில் பிரதமர்

மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவது, போர் சூழ்நிலையை நீக்குவது ஆகியவை குறித்து நடைபெற்ற சுற்றுப்பேச்சுக்கள் போதுமானவை என்று நாங்கள் திருப்தியடைந்த பின்னரே, அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு நடத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

மாலைதீவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர், மாலைதீவு தேசிய தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட பேட்டியின் போதே இதனைக் கூறினார். சமாதானப் பேச்சுக்களின் இன்றைய நிலைகுறித்து வினவியபொழுது பிரதமர் மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்களின் முதல் சுற்றே இப்பொழுது நடைபெறுகிறது. மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவது குறித்தே முதல் சுற்றில் பேசுகிறோம். அகதிகளை மீளக்குடியமர்த்துவது, நாசமடைந்த நகரங்கள், கிராமங்கள், வீடுகள் ஆகியவற்றை மீண்டும் கட்டியெழுப்புவது, கண்ணிவெடிகளை அகற்றுவது ஆகியவை குறித்து இப்பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

யுத்த சூழ்நிலையை படிப்படியாக



நீக்கி, நாளாந்த மனித வாழ்க்கையை மேற்கொள்ளக் கூடிய சூழலை ஏற்படுத்துவது குறித்து இரண்டாவது சுற்றுப்பேச்சில் கவனம் செலுத்துவோம்.

இவையெல்லாம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுற்றுப் பேச்சுக்கள் குறித்து நாம் திருப்தியடைந்த பின்னரே அரசியல் தீர்வுபற்றிய பேச்சுக்களை நடத்துவோம்.

- இவ்வாறு பிரதமர் ரணில் பேட்டியில் கூறினார். (ஐ-4)

## கடந்த ஆண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு

# வெள்ள நிவாரணம் வழங்க ரூபா 3 லட்சம் கிடைத்தது

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஆண்டில் வெள்ள அபாயம் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

இதற்கென சமூக சேவைகள் அமைச்சு மூன்று லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது என உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வெள்ள நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்டு அது குறித்து கிராம அலுவலர்கள் மூலம் விண்ணப்பித்தவர்களுக்கே தற்போது நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது என்றும் -

சம்பந்தப்பட்டவர்களுக்கான காசோலைகளை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது என்றும் - உதவி அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (எ-76)

## மகரஜோதி பெருவிழா

வலி.வடக்கு,டிசெ.20

ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் மகர ஜோதிப் பெருவிழா உடுவில் லவ்லேனில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணிமுதல் இடம்பெறவுள்ளது.

பூசை வழிபாடுகள், பஜனைகளைத் தொடர்ந்து பிரசங்கவாருதி வகுமாரசாமியின் ஐயப்பன் வரலாறு பற்றிய பிரசங்கமும் இடம்பெறவுள்ளது. (ம-86)

## இலவச மருத்துவ முகாம்

காட்டுப்புலத்திலிருந்து இடம்பெயர்ந்து சுழிபுரம் கம்பனை முகாமில் வசித்துவரும் மக்களுக்காக தென்னிந்தியத் திருச்சபை இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தி வருகின்றது.

முகாமின் அருகே அமைந்திருக்கும் தென்னிந்தியத் திருச்சபை சிறுவர் பாடசாலைக் கட்டடத் தொகுதியிலேயே மருத்துவ முகாம் இடம்பெற்று வருகின்றது. (ம-டு)

# குமுதினி படகுச் சேவையை மீண்டும் ஆரம்பியுங்கள்!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

குறிகாட்டுவானுக்கும் - நெடுந்தீவுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த 'குமுதினி' படகினை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் உதவி அரச அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபர் க.பேரானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்ட உள்ளூர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.



குமுதினிப் படகு

தற்போது பழுதடைந்த நிலையில் சேவையில் ஈடுபடாதுள்ள 'குமுதினி.' படகினை உடனடியாகத் திருத்தவும் -

தொடர்ச்சியாக அதனை சேவையில் ஈடுபடுத்தவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

பருவமழை ஆரம்பித்திருப்பதைய டுத்து திறந்த வெளிப் படகுகளில் பயணஞ் செய்வோர பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் - கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நெடுந்தீவு மாவட்ட ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி பல வருடங்களாக மேற்படி ஆஸ்பத்திரிக்கு நிரந்தரமாக டாக்டர்கள் எவரும் நியமனம் செய்யப்படவில்லை என்றும் -

இதனால் பதில் கடமைபுரியும் டாக்டர்களே அதாவது மீள்நியமனம் பெற்றவர்களே இங்கு தொடர்ந்தும் நியமனம் செய்யப்படுகின்றார்கள் என்றும் -

தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதான வீதியில் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் உள்ள வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும என்றும் -

இந்தக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, சுகாதாரம்,கல்வி, மருத்துவம்,விவசாயம் ஆகியன குறித்தும் இந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. (எ)

# வயோதிபரின் கண்ணினால் மாணவிக்குப் பார்வை!

யாழ்ப்பாணம்,டிசெ.20

காரைநகரைச்சேர்ந்த வயோதிபர் ஒருவர் தானஞ்செய்த கண்மூலம் சங்கானையைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவருக்குப் பார்வை கிடைத்துள்ளது.

தாம் இறந்தபின்னர் தமது கண்களைத் தானமாக வழங்குமாறு கூறியிருந்த வயோதிபர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகரில் உயிரிழந்தார்.

அவர் உயிரிழந்த தகவல் வயோதிபரது உறவினர்களால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக அங்குசென்ற கண் சத்திரசிகிச்சை நிபுணர் எஸ். குகதாசன் தலைமையிலான குழுவினர் வயோதிபரது இரு கண்களையும் நல்ல நிலையில் அகற்றி, பாதுகாப்பாக யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தனர்.

ஏற்கனவே கண் ஒன்றைப் பொருத்த வேண்டிய நிலையிலிருந்த சங்கானையைச் சேர்ந்தவரும் மகாஜனக் கல்லூரி மாணவியுமான நாகமுத்து சுஜினிக்கு(வயது 20) வயோதிபரின் கண்களில் ஒன்று சத்திர சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது.

இம்மாணவிக்கு மூன்றரை வயதாக இருக்கும்போது இடது கண்ணில் கண்ணாடி தெறித்ததால் பார்வைத்திறனை இழந்திருந்தார்.

வயோதிபரின் இரண்டாவது கண் இன்று சத்திரசிகிச்சை மூலம் மற்றொருவருக்குப் பொருத்தப்படவுள்ளது என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-9-13)



# ஈழத்துச் சிதம்பரத் தேர்த்

# காரைநகர் சிவன் கோ


அழகிய ஜவுளிகளின் ஆலயம்
**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2063

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்
**கணேசன் ஸ்ரோஸ்**
201, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

திருமணப் பட்டுச் சேலைகளின் சோலை
**மகாராணி பட்டுச் சோலை**
50, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

திருமணப் பட்டுப் புடைவைகளின்
சாம்ராய்ச்சியம்
**இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்**
இல. 57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**லலிதா புடைவை மாளிகை**
உங்கள் ஜவுளித் தேவைகளுக்கும் கல்யாணப் பட்டுப்
புடைவைக்கும் தலைசிறந்த ஸ்தாபனம்.
இல. 5,6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
கிளை: சிறி கணேஸ் ரெக்ஸ்
இல. 20, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**அற்புதா ரேடிங் கொம்பனி**
198, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

**க.கனகசுந்தரம் பலபொருள் வாணிபம்**
152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஏகாம்பரம் புடைவை மாளிகை**
72(9), பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

**தி.தெய்வேந்திரராசா பலபொருள் வாணிபம்**
63, 95, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## புண்ணிய பூமியில் ரதோற்சவம்



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகிய காரைநகரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் தனது பரிவாரமூர்த்திகளுடன் இன்று பஞ்சரத பவனி வருகின்றார்.

இந்த ஆலயத்தில் நடைபெறுவது போன்று திருவாதிரை உற்சவம் இலங்கையில் வேறு எந்த ஆலயத்திலும் நடைபெறுவதில்லை. காரைநகர் மக்கள் நீண்டகாலமாக திருவாதிரை உற்சவத்தை ஈழத்துச் சிதம்பரத்தில் பெருவிழாவாகச் செய்து வருகின்றனர். அவற்றிலே நடராஜர் இரதாரோகணமும் ஆருத்திரா அபிஷேகமும் சிறப்பு வாய்ந்தவை.

தென்னிந்தியாவில் உள்ள சிதம்பரத்திற்குச் சென்று திருவாதிரை விழாவினைத் தரிசிக்க முடியாது அகக் கண்களால் அக்காட்சியைக் காணும் அடியார்கள் ஈழத்தில் காரைநகரில் உள்ள சிவன் கோயிலில் தில்லை நடராஜப் பெருமானின் திருநடனக் கூத்தினைப் புறக் கண்களால் கண்டுகளிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

இந்த ஆண்டில் சமாதானத்தின் ஒளிக்கீற்று தென்படுகிறது. இந்த சமாதான சூழலைப் பயன்படுத்தி ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும் வருகைதந்துள்ள பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருவாதிரை விழாவினைக் கண்டு தரிசித்துக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த காலங்களில் இந்த திருவாதிரை உற்சவம் சிறப்பாக நடைபெற்றபோதிலும் மக்கள் மனதில் ஒருவித பயம் கலந்த நிலையிலேயே தரிசனம் செய்ததை உணரமுடிந்தது. ஆனால், இவ்வருடம் உருவாகி உள்ள சமாதான சூழ்நிலையில் இந்த அச்ச உணர்வு நீங்கி, சுதந்திரமாக தில்லை நடராஜப் பெருமானினது பஞ்சரத பவனியையும் திருநடனக் காட்சியையும் கண்டு தரிசிக்கமுடிகின்றது. இந்த பஞ்சரத பவனியையும் திருநடன காட்சியையும் கண்டுகளிக்கின்ற பக்தர்கள் அனைவரும் பிறவிப்பிணி நீங்கி, எல்லையில்லாப் பேரின்ப பெருவாழ்வு பெற்றுய்ய எல்லாம் வல்ல சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானினதும் பூரணை புட்கலை சமேத ஆண்டிகேணி ஐயனாரினதும் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

**தி.மகேஸ்வரன்** - *இந்து கலாசார அமைச்சர்.*

## தில்லையின் மறுவடிவம்



ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று இரதோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. திருவாதிரை விழா இந்தியாவில் உள்ள சிதம்பரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. அது போலவே இங்கு ஈழத்துச் சிதம்பரத்திலும் – விமரிசையுடன் பக்தி பெருகிட நடப்பது மகிழ்ச்சிக்குரியது.

இந்தியாவில் உள்ள சிதம்பரத்திற்குச் சென்று மார்கழி திருவாதிரை உற்சவத்தையும் தில்லைக்கூத்தனின் திருநடனத்தையும் கண்டு தரிசிக்கமுடியாத நம்நாட்டு சிவனடியார்களுக்கு சிதம்பரத்தில் நடைபெறுவது போன்ற பூசை வழிபாட்டு முறைகளும் ஆருத்திரா தரிசனமும் நடைபெறும் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிலில் நடைபெறும் மார்கழித் திருவாதிரை உற்சவம் ஒரு வரப்பிரசாதம் ஆக அமைந்துள்ளது. ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற வாழ்த்துவதோடு, அடியார்கள் இந்த உற்சவத்தில் கலந்துகொண்டு தில்லைக்கூத்தனின் திருவருளைப் பெற்று உய்யும்வண்ணம் எம் பெருமானை வேண்டுகின்றேன்.

**ஜே.எக்ஸ்.செல்வநாயகம்**
*உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை.*

## ஆனந்தக்கூத்தனே அருள்வாய்!




சைவமும் தமிழும் உயர்ந்து விளங்கும் காரைநகரில் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படுகின்ற சிவன் கோயிலில் ஆடல் புரியும் ஆனந்தக்கூத்தன், அம்பலவாணன், நடராசப் பெருமான் சிவகாமசுந்தரியுடனும் ஏனைய பரிவார மூர்த்தங்களுடனும் பக்தர்கள் புடைசூழத் தேரில் பவனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும் குமிண் சிரிப்பும் பனித்தசடையும் கொண்ட நடராசப் பெருமான் தூக்கிய திருவடியுடன் ஆடி அசைந்து வரும் காட்சி அற்புதக் காட்சியாகும். இக்காட்சியைக் காணும் பக்தர்கள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவார்கள். மெய்தான் அரும்பி விதிர் விதிர்ப்பார்கள். கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்புவார்கள்; வெதும்புவார்கள்; உள்ளத்தை நெகிழவைக்கும் அற்புதக் கோலத்தை நாமும் கண்ணாரக் கண்டு போற்றி வணங்கி அவன் அருள் பெறுவோமாக. வீதிவலம் வரும் சிதம்பர நடராசப் பெருமானின் தேரினை வடம்பிடித்து இழுத்து எம் வினை எல்லாம் வேரோடு அகல திருவருள் பெற்று உய்வடைவோமாக.

**மு.சு.வேலாயுதபிள்ளை**
*தலைவர், காரைநகர் மணிவாசகர் சபை,*
*அதிபர், யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.*







## துன்பம் நீ...



உலகில் உள்ள எல்லாப் ...
தானே அறிகின்ற பொருள், அற...
முடியாத பொருள். இவற்றை ...
கூறுகின்றன.

ஆனால், இறைவன் இன்...
துன்பத்தை நுகர்கின்றன. "ச...
மண்ய புயங்கத்தில் சங்காரும் ...
குத் திருவுளங்கொண்ட இறை...
உடம்பையும், கருவி கரணங்...
ளினார். அவ்வாறு படைத்த ஏழுவகைப் பிறவிகளில் ம...

"அரிது அரிது மானிடராதல் அரிது" - ஔவையா...
"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதி...
எண்ணில்லாத உலகங்களில் எண்ணில்லாத உடம்...
இறந்து மாறி மாறி வந்து களைப்புற்றேன் என்கிறார் ம...

ஏழு கடற்கரைகளின் மணல்களை எண்ணி அளவிட...
விடலாம். ஆனால், நாம் பிறந்த பிறப்பை எண்ணி அ...

"ஏழுகடல் மணலை அளவிடின் திலகம் என திட்...
சிவபெருமானுடைய திருவடியைச் சென்று சேருவத...
மார்க்கத்திற்கும் உரியவனாக விளங்குவன திருக்கோயி...

திருக்கோயில் வழிபாட்டில் நம்மை ஈடுபடுத்துவது ...
மும்மூர்த்திகளிலும் சிவபெருமானே மேலான கடவுள். ...
யும் பொருட்டு ஊழிக்காலத்திற்குப் பின்னரும் உள்ளவ...

இத்தகைய சிறப்புப் பொருந்திய சிவனுக்கு இலங்கை...
திசையில் உள்ள காரைநகரின் வடக்கே மூர்த்தி, தலம்...
எனப் போற்றப்படும் நீலமிடற்று நிமலன் ஆலயமானது...
தலமாகும். இத்திருவாதிரையில் தில்லைக்கூத்தனினதும் ...
பஞ்சரத பவனியையும் தில்லை நடராஜனின் திருநடனக் ...

மலர் அமைப்பு
நடராஜா (உதயன் காரைநகர் செய்தியாளர்)

*செயலாளர், ...*
*மாவட்ட ...*


**மகாலக்சுமி ஸ்ரோர்ஸ்**
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2024,
021 222 2025.

புத்தம் புதிய Lumala துவிச்சக்கர வண்டிகளுக்கும்
மற்றும் உதிரிப்பாகங்களுக்கும் நீங்கள் நித்தம்
நாடவேண்டிய இடம்:
**ஈஸ்வரன் றேடஸ்**
இல.69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2813

வண்ண வண்ணப் பட்டுப் ...
சங்கமம் ...
**சீமாட் ... புடைவைச ...**
122, மின்சார நில ...
யாழ்ப்பாண ...
T.P.: 021 22 ...

# ...தி) திருவிழாச் சிறப்பு மலர்

# ...கோயில் 20-12-2002





## புண்ணிய ஷேத்திர விழா





சிவநேயச் செல்வர்களும் சிவதர்ம வள்ளல்களும் நிறைந்த புண்ணிய பூமியாகிய காரைநகரில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்று வடமொழி வேத சிவாகம நெறி தவறாது பூசை விழாக்கள் நடைபெறும் ஈழத்துச் சிதம்பர புண்ணிய ஷேத்திரத்தில் வருடத்தில் மூன்று முறை நடைபெறும் மஹோற்சவத்தில் சாந்திக மஹோற்சவமாகிய திரு வெம்பாவை உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும் இவ்வேளையில், இன்று காலை தில்லைக்கூத்தன் சிவகாமி அம்பாள் சமேதராகவும் ஏனைய பரிவார மூர்த்திகளோடும் பஞ்சரதத்தில் பவனிவரும் கண்கொள்ளாக் காட்சியினையும் இரவு நடைபெறும் ஆருத்திரா அபிஷேகத்தையும் நாளை மாலை நடைபெறும் திருவூடல் காட்சியையும் அடியார்கள் யாவரும் தரிசனம் செய்து சகல சௌபாக்கியங்களோடும் வாழ எம்பெருமானின் திருவருளை இறைஞ்சி ஆசி கூறுவதில் பெருமை அடைகின்றோம்.

**ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்** *(ஆதீன கர்த்தாக்கள்)*

## துயர் போக்கிடும் ஆதிரை

மார்கழி மாதம் தேவர்களுடைய நாளில் உள்ள வைகறைக் காலமாகும். அக்காலம் வழிபாட்டுக்குச் சிறந்ததாகலின் தேவர்கள் யாவரும் இறைவழிபாடு ஆற்றுவர். எனவே, அக்காலம் எமக்கும் விசேஷமுடையதாகின்றது. ஆதலால், மார்கழித் திங்களில் நாம் வைகறையில் துயில் நீங்கி, தாயநீரில் ஆடி, சமயச் சின்னங்களை அணிந்து, திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுவது இன்றியமையாததாகும். இத்திங்கள் முழுவதும் தெய்வ வழிபாட்டினை முறைப்படி செய்தால் ஆண்டு முழுவதும் அவ்வாறு செய்த பலன் உண்டாகும். இச்சிறப்புப் பற்றியே மார்கழி மாதம் முழுவதையும் தெய்வ வழிபாட்டிற்கென ஒதுக்கி உலகியல் நிகழ்ச்சிகளாகிய திருமணம் முதலியவற்றைத் தவிர்த்துவைத்துள்ளனர் முன்னோர்.

ஒவ்வொருநாளும் வைகறையில் எழுந்து நீராடி இறைவழிபாட்டைச் செய்துமுடித்த பின் தமது வேலையைத் தொடங்கினால் அது இடையூறின்றி நன்கு முற்றுப்பெறும். அதுபோலவே மார்கழித் திங்களில் வழிபாடுகளை நன்கு புரிந்தால் அடுத்துவரும் உத்தராயணத்திற் செய்யப்படும் திருமணம் முதலிய செயல்களும் நன்றாக முடியும். இது பற்றியே தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழி உருவாயிற்று.

கூத்தப்பிரானுக்குரிய வழிபாட்டுக் காலங்களில் திருவாதிரையே மிக விசேஷமானது. திருவாதிரை நட்சத்திரம் பன்னிரண்டு மாதங்களிலும் வருமாயினும் மார்கழியில் வரும் திருவாதிரையே பெருஞ் சிறப்புடையது.

நட்சத்திரங்கள் இருபத்தேழினுள் திரு என்னும் அடைமொழி பெற்றுச் சிறப்புற்றவை இரண்டேயாம். ஒன்று திருவாதிரை; மற்றையது திருவோணம். திருவாதிரை சிவபெருமானொடு சம்பந்தமுடையது. ஆதிரைநாதன் என்பது பரமசிவத்தின் பெயர்களுள் ஒன்று. திருவாதிரை நட்சத்திரம் சூரியனுக்கு மேல் 350 ஒளி வருடங்களுக்கு அப்பால் 300 சூரியன்களைக் கொள்ளும் பருமனும் ஒரு லட்சம் அளவு சூரியன்களின் வெப்பத்தைத் தரும் தன்மையினையும் உடையது என்பர் அறிஞர்.

திருநாவுக்கரசுநாயனார் ஆதிரை நன்னாளான் என்றும், ஆதிரைநாயகன் என்றும் சிவபிரானைக் குறிப்பிடுகின்றார். திருஞானசம்பந்த சுவாமிகள் திருவவதாரஞ்செய்த நாளும், அவர் அழுது ஞானப்பால் உண்டருளிய நாளும் திருவாதிரைத் திருநாளாகும். சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தை ஒரு சித்திரை மாதத் திருவாதிரை நாளில் பாடத் தொடங்கி, மறுவருடம் சித்திரை மாதம் திருவாதிரை நாளில் முடித்து அரங்கேற்றினார் என்று கூறுவார் உமாபதிசிவம். மதியணி புனிதன் நன்னாள் என்று சேக்கிழார் பெருமானும் திருவாதிரையைப் புகழ்ந்து கூறுவர். இவை களெல்லாம் திருவாதிரை நாளின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றன.

ஆதிரை விழா மார்கழி மாதத்தில் பூரணையை அடுத்துவரும் திருவாதிரையை முடிபாகக் கொண்டு, அதற்குப் பத்து நாள்களுக்கு முன் தொடங்கி நடத்தப்படுவதாகும். இவ்விழா சிவபெருமானுக்குப் பொதுவகையால் சிறந்ததாயினும் அப்பெருமானது அருள் மூர்த்தங்களுள் ஒன்றாகிய நடராஜமூர்த்திக்கு மிகவும் சிறப்புடையதாகும். இவ்விழாவின் ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவாகும். அன்று இரவு வைகறைப் பொழுதில் திருவாதிரையில் செய்யப்படும் மகா அபிஷேகத்தைத் தரிசிப்பது கிடைத்தற்கரிய பெரும் புண்ணியமாகும். மகா அபிஷேகம் நிறைவெய்தியபின் சூரியோதய காலத்தில் நடராஜமூர்த்தியைத் தரிசனஞ்செய்தலையே ஆருத்திரா தரிசனம் என்பர். திருவாதிரையைக் குறிப்பதாகிய ஆருத்திரா என்னும் வடமொழி நனைதல், ஈரமாதல், முழுகுதல் எனவும் பொருள்படுதலால் அந்நாளில் இறைவற்கு அபிஷேக ஆராதனைகள் செய்தல் விசேடமுடையதாயிற்று.

மனித வாழ்வில் சிறந்த பேறாக ஆன்றோரால் மதிக்கப்படுவன பலவுள. அவற்றுள் கண்பெற்ற தன் பயனாக மதிக்கப்படுவது இறைவர் திருவிழாப் பொலிவு காண்டலாகும். ஆதிரைவிழா அவ் விழாக்களுள் மிகவும் சிறப்புடையது. அதனை,

"ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே" என்று திருவாதிரை

நாள் விழாவைக் காணவந்த திருமால், பிரமன், அங்கி, சூரியன், இந்திரன் முதலாந் தேவர் கூட்டம் ஆடிப்பாடி நிறைந்துள்ளதைச் சேக்கிழார் அருளிச் செய்தமை கொண்டு அறியலாம்.

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தருவேல் வல்லார் கொற்றங் கொள்சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச்சரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்.

இங்கே திருவாதிரை விழாவினைக் காண்பது மனிதப் பிறவியின் நோக்கம் என்று கூறிப் பூம்பாவையை அழைக்கிறார் திருஞானசம்பந்தர்.

இவ்விதமான பெருஞ்சிறப்பினையுடைய திருவாதிரை விழா சிதம்பரத்தில் மிகமிகச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. அங்கு நடைபெறுவது போலவே ஈழத்துச் சிதம்பரத்திலும் நடைபெற்றுவருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

"தாய்நாட்டுத் தமிழ்மக்கள், இந்தத் தில்லையாம் சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழ்ந்தால், சேய்நாடான ஈழத்து மக்களும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழலாம்தானே. அங்கு நடக்கும் திருவாதிரைத் திருவிழா, மணிவாசகர்விழா என்பன ஈழத்தில் நிலைத்திருக்கும் சைவ உணர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன என்று நான் சொன்னால் அது மிகையாகாதல்லவா" என்று தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துச் சிதம்பரத்துக்கு வருகைதந்து நடேசப் பெருமானை வழிபட்டுச் சென்ற பேரறிஞராகிய திரு.தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் கூறியிருப்பது இப்பொழுது நினைவுகூரப்பட வேண்டியது.

*தத்துவக்கலாநிதி, சிவத்தமிழ் வித்தகர்*
*சிவத்திரு.* **க.வைத்தீஸ்வரக் குருக்கள்**, *காரைநகர்.*

## ...ம் பெருமான்

...எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவில் அடக்கி விடலாம். ...ருள், அறிவித்தால் அறிகின்ற பொருள், அறிவித்தாலும் அறிய ...வற்றை பதி, பசு, பாசம் என்று நம் சைவசமய ஞானநூல்கள் ...

...ன் இன்பவடிவினன். ஆன்மாக்கள் ஆணவத்துடன் கூடித் ...ன. "சதா பாரத துக்க பவான் தீனபந்தோ" என்று சுப்பிர ...காரும் கூறுகின்றனர். ஆன்மாக்களின் துன்பத்தை நீக்குவதற் ...ட இறைவன் அருவ திருமேனி தாங்கி ஆன்மாக்களுக்கு ...கரணங்களையும், உலகங்களையும் படைத்துக் கொடுத்தரு ...ளில் மனிதப் பிறவி உயர்ந்தது.

...வையார்

...ன் யாதினும் அரிதரிது காண்" என்கிறார் தாயுமானவர்.

...உடம்புகளை எடுத்து, எண்ணில்லாத காலங்களாகப் பிறந்து, ...றார் மணிவாசகர்.

...அளவிட்டு இத்துணையென்று அறுதியிட்டுக் கூறினும் கூறி ...வி அளவிடமுடியாது என்கிறார் அருணகிரிநாதர்.

...ன திடர் பிறவி அவதாரம்"

...சிருவதற்கு வகுக்கப்பெற்ற சிவாகம மார்க்கம் நான்கு. நான்கு ...க்கோயில்.

...வது திருமுறைகள். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் ...வர். சிவபெருமான் மட்டுமே ஆன்மாக்களுக்கு அருள்புரி ...ள்ளெழுந்தருளாவார்.

இலங்கைத் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தின் மேற்கு ..., தலம், தீர்த்தம் ஒருங்கே அமைந்துள்ள ஈழத்துச் சிதம்பரம் ...மானது திருவாதிரைக்கு உலகில் இரண்டாவது புகழ்பெற்ற ...னதும் பூரணை புட்கலை சமேத ஆண்டிகேணி ஐயனாரினதும் ...டனக் கூத்தினையும் கண்டு திருவருளினைப் பெறுவோமாக!

**வே.சாம்பசிவம் B.A., S.L.P.S.**

*...ளர், மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபை,*
*...வட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர், நீகோட்.*






**SRIMURUGAN**
Communication & Computer Systems
303, K.K.S. Road, Jaffna.
T.P. No.: 021 222 2670, 3588
Fax: 021 222 3214

**வெங்கடேஸ்வரா**
125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
*கிளை நிறுவனம்:*
**சிறி மாதவன்**
97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No.: 021 222 2905

தரம் 6 முதல் A/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.
**ஐடியல் அக்கடமி**
சண்டிலிப்பாய்,
காரைநகர்.

**கீன் கல்வி நிலையம்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

கல்லையொத்த மனமும் கசிந்துருகக் காட்சி தந்திடும் தில்லைச் சிவனின் திருத்தேர் வடம் பிடித்திழுக்க வாரீர்!
**யோ.சிவரஞ்சன்**
**பல்பொருள் வாணிபம்**
45, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தேரேறி வரும் தில்லை நடராசப் பெருமானை அருள்வேண்டிப் பிரார்த்திக்கும்
**காரை. துரித காகிதாதிகள் சேவைகள்**
ஆஸ்பத்திரி வீதி, காரைநகர்.
(உங்கள் பிறந்த திகதியை மட்டும் கொண்டு 2003ஆம் வருட பொதுப்பலனை குறைந்த கட்டணத்தில் கணனிமூலம் எண்சோதிடத்தில் பார்க்கலாம்)

**கலைமகள் வர்த்தக நிலையம்**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**கண்ணன் ஸ்ரோஸ்**
**(பல்பொருள் வாணிபம்)**
வேம்படி, காரைநகர்.

**படப்பிடிப்பாளர்**
**திரு**
சுழிபுரம். காரைநகர்.

கணனிமூலம் அச்சுவேலைகளைச் செய்து பெற்றிட
**தேவி அச்சகம்**
114/9, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

கலை வளர்ச்சியினையும் சமூக சேவையினையும் கொண்ட மன்றம்
**காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்**
புதுரோட், காரைநகர்.
Note: கிராமத்தில் புதிய ஆண்டுக்கான பணிகளை காரைநகர் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

...ட்டுப் புடைவைகளின் ...கமும் ...ட்டி ...வக் கடல் ...நிலைய வீதி, ...பாணம். ...1 222 2196

தேரேறி அடியவர் தம் வல்வினை போக்கும் ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் கழல் போற்றும்
**இ.ச.பேரம்பலம்**
**சக நிறுவனம்**
இல. 50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

"கோமாதா எங்கள் குலமாதா"
கோமாதாவாகிய பசுவை நாங்கள் பேணிப்பாதுகாத்து வணங்குவோம்.
**க.கு.கந்தையாபிள்ளை**
**அன் சன்ஸ்**
318(124), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### வல்வை
### வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி
## தேவஸ்தான திருவாதிரை உற்சவ விழா

மேற்படி ஆலய திருவாதிரை உற்சவ விழா நாளை (21.12.2002) சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெறும். சிறப்பு நிகழ்ச்சியாக காலை 9.30 மணிக்கு இன்னிசை வேந்தர் சோ.உமாரமண சிவாசாரியார் அவர்களின் தெய்வீக இன்னிசை நிகழ்வு சிறந்த பக்கவாத்திய சகிதம் நடைபெறும். தொடர்ந்து நடராஜப் பெருமான் திருநடனமாடி வீதியுலா வந்து அருள்காட்சி தந்து அருள்புரிவார்.

- ஆதீனகர்த்தா.

(95134)


## 35வருடங்களாக திருத்தப்படாத வீதி

அராலி டிசெ.20

அராலி மத்தி குழுக்கன்குளம் பிரதான வீதி கடந்த 35 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது மிக மோசமான நிலையில் உள்ளது.

அருகே பாதுகாப்பற்ற குளம் ஒன்று இருப்பதால் இந்த வீதியை செப்பனிட்டுத் தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களை கோரி வருகின்ற போதும் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இது விடயத்தி சம்பந்தப் பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ம-ரி)


### சேவை நலன் பாராட்டு



எங்கள் கல்லூரியின்
நல்லாசிரியையான
**திருமதி**
**இராஜபூபதி சோமசேகரம்**
அவர்கள் (இ.ஆ.சேவை வகுப்பு I) 20.12.2002இல் அகவை 60ஐ பூர்த்தி செய்து ஓய்வுபெறுகிறார். அவர்தம் சேவையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் சேவை விவரம்:

1. திருகோணமலை புனித வளனார் தமிழ் வித்தியாலயம் 01-11-76 - 22-02-78
2. யா/இணுவில் இந்துக் கல்லூரி 23-02-78 - 19-12-2002

எமது கல்லூரியில் 25 வருடங்கள் சிறந்த நற்சேவைதனைச்செய்து மாணவர் கல்வி மேம்பாட்டைய கடமை உணர்வுடன் உழைத்த ஆசிரியையின் ஓய்வுகாலம் நல்ல பொழுதாக மகிழ்வுடன் அமைய வாழ்த்துகின்றோம்.

கல்லூரி அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/இணுவில் இந்துக் கல்லூரி.

(95150)



"அஷ்டலக்ஷ்மி" கலண்டர்
விற்பனையில் 2002இல்
தங்கப்பதக்கம் பெற்றோர் விவரம்

★ சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி.
★ பூபாலசிங்கம் புத்தகசாலை, வெள்ளவத்தை.
★ கிப்ற் ஹவுஸ், கல்முனை.
★ K.P.K. சென்ரர், வவுனியா.

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

(11373)



**SUBRA(14)**
சித்தன்கேணி
இரசாயனவியல்
**அன்பழகன்**
Sat., Sun. 6-7p.m.
**2003 - Paper Class**
Sat., Sun. 5-6
2004 அசேதன இரசாயனம்
உயிரியல் - கஜன்
3-4 Sat., Sun.
**2003 Paper**
4-5 Sat., Sun.
2004 (C/25458)



### கண்ணீர் அஞ்சலி

எமது யாழ்ப்பாண பூபாலசிங்கம் புத்தகசாலை முகாமையாளர் **மகாலிங்கம் (மகான்)** அவர்களின் அன்புத் தாயார்

**வீரவாகு பூமணி**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
*யாழ்ப்பாணம்.* (11959) பூபாலசிங்கம் புத்தகசாலை.



### கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தின் தலைவர் **வீ.ஓங்காரலிங்கம்** அவர்களின் அன்புத் தாயார்

**வீரவாகு பூமணி**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ பிடாரி அம்பாள்
*நயினாதீவு.* (11960) சனசமூக நிலையம்.



### நெஞ்சைவிட்டகலாத மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 - 08 - 1949



உதிர்வு 23 - 12 - 1999

**அமரர் வைரமுத்து இரத்தினசிங்கம் (வாணம்)**

(காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)
*திதி: பிரதமை 20.12.2002*

எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து ஆண்டுகள்
மூன்று கடந்தாலும் உங்கள் நினைவு
என்றும் எம் நெஞ்சிலே நீறு பூத்த நெருப்பாக
எரிந்துகொண்டே இருக்கும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நி. முகவரி:
*கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.*
என்றும் உங்கள் நினைவால் வாடும்:
மனைவி, சகோதரர்கள்.
த. முகவரி:
*கட்டுடை, மானிப்பாய்.*
(95119)



### ஈழத்து சிதம்பரத்தில் ஐந்து தேரோட இந்நாட்டில் நல்ல தீர்வு வரும்



### ஈழத் தமிழராட்சியை இந்நிலத்தில் காக்க தேரேறி வருக! சிவனே!



ஈழத்து சிதம்பர நடராஜன் தேரேறி வருகிறான்
இந்நாட்டு தமிழினத்திற்கு தீர்வுகொண்டு தேரேறி வருகிறான்
ஆலமுண்ட கண்டன் ஐயப்பன் சகிதமாகத் தேரேறி வருகிறான்
அழுகின்ற தாய்மாரின் துயரினைப் போக்க தேரேறி வருகிறான்
நாளை மலரும் ஈழத்தமிழராட்சி இந்நிலத்தில் சிறக்க தேரேறி வருகிறான்
நாடிவரும் சமாதான சம்வாழ்வை நிறைவேற்ற தேரேறிவருகிறான்
ஏழை பங்காளன் எல்லோரின் சிவன் தேரேறிவருகிறான்
எம்பேத வாழ்வகற்றி எழில் நலம் தரவே தேரேறி வருகிறான்
சௌந்தராம்பிகை சுந்தரேசன் தாண்டவமாடித் தேரேறி வருகிறான்
சரித்திரப் பெருமை மிக்க சிதம்பரத்தில் தேரேறி வருகிறான்
சுந்தரக் கோலந்தாங்கி தில்லைக் கூத்தன் தேரேறி வருகிறான்
துதி செய்யும் அன்பர்க்கு வரமீய எங்கள் சிவன் தேரேறி வருகிறான்
இந்திரலோகம் போன்ற ஈழத்துச் சிதம்பரத்தில் தேரேறி வருகிறான்
ஈழத்தமிழரின் இணையற்ற தலைவன் தேரேறி வருகிறான்
நாளை எம் தேசத்தில் நல்ல தீர்வுகொண்டு தேரேறி வருகிறான்
நடேசர் ஐயப்பன் திருவருள் வேண்டி வடம் பிடிப்போம்.

கவிமாமணி மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன். (C/25476)

(நாடு நலம்பெற, நம்மினம் வளம்பெற, சமாதானம் மலர ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று (2002-12-20) தேரேறும் நடேசரை வேண்டி தேர் விழா சிறக்க வாழ்த்துவோர்)

மலர் புடைவையகம்
இல.18 (67/A) பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

ரூபா பன்முக வர்த்தகம்
இல. 104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீ விக்கினேஸ்வரா, சாவகச்சேரி.



### 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கனகலிங்கம் சுரேஷ்**

*(கண்ணன்)*

தாயின் மடியில் 10.05.1979
ஆண்டவன் அடியில் 24.12.2000
திதி: 20-12-2002

வல்ல தவப் பேற்றினாலே வந்துதித்த
வடிவழகன் சுரேஷ் கண்ணா எங்கு சென்றாய்?
நின் முகத்தைக் காணாமல் கதறுகின்றோம்!
நின் குரலைக் கேளாமல் பதறுகின்றோம்!
நல்லவனே! உன் முகத்தைக் காண்போமா?
மின்னும் சிரிப்பை மேதினியில் இனிக் காணமுடியுமா?
தொல்லுலகில் திரவியமும் தேடச் சென்றாய்!
அல்லலுற்றே பனிக்குளிரால் உயிரை நீத்தாய்!
உன் பிரிவால் துடிக்கின்றோம்! கண்ணீர் சிந்துகின்றோம்
எங்கள் குடும்பவிளக்கே நீ எங்கு சென்றாய்?
நல்லாத்மா சிவபதத்தில் பெறுக சாந்தி!

உன் பிரிவால் துடிக்கும்:
தாய், தந்தை, சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

*விவேகானந்த வீதி,*
*மஞ்சத்தடி, இணுவில்.* (95140)

# நடைபாதை வியாபாரியாக இருந்து நாடறிந்த வர்த்தகரான தாஸ முதலாளி

## அரசியல் பழிவாங்கல்களைக் கண்டிக்கிறார் தேசபந்து குணதாஸ




ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தாஸ கூட்டு நிறுவனங்களின் அதிபதி தேசபந்து எஸ்.ரீ.குணதாஸவை அறிவிப்பாளர் சமுதிக சமர விக்கிரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள்.

**வர்த்தக ஸ்பெஷல்**

*ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 17ஆம் திகதி தோன்றித் தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் தாஸ கூட்டு நிறுவனங்களின் அதிபர் தேசபந்து எஸ்.டி.குணதாஸ.*

*பாடசாலைக்குச் சென்றுவரும் காலத்தில் சக மாணவர்களுக்கு இனிப்புப் பண்டங்களை விற்பனைசெய்து பணம் சேர்த்த தாஸ, இன்று தாஸ கூட்டு நிறுவனங்களின் அதிபதியாக இருக்கிறார்.*

*தெனுவரப் பகுதியைச் சேர்ந்த தாஸ, கொழும்பில் கல்வி கற்றார். சிறுவயதில் இருந்தே வீதியோர வியாபாரத்தில் ஈடுபட்ட இவர், இன்று நாடறிந்த வர்த்தகராக உயர்ந்துள்ளார்.*

*எப்படியும் முன்னேறிவிட வேண்டும் என்ற இலக்கு அவரிடம் இருந்தது. அதனால் ஏற்பட்ட அவரின் வளர்ச்சியைக் கண்டு அவரே வியப்படைகிறார்.*

*ஒரு மனிதன்முன்னேறும்போது தடைகள் ஏற்படுவது இயற்கை. இதில் தாஸ முதலாளி விதிவிலக்கானவர் அல்லர். தனது எத்தனையோ திட்டங்கள் அரசியல் பழிவாங்கலினால் தடைப்பட்டுவிட்டன என்று கூறுகிறார்.*

*ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தாஸ முதலாளியை அறிவிப்பாளர் சமுதிக சமவிக் கிரமவும் 113கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குருப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.*

*கேள்வி:* தாஸ முதலாளி என்றால் நாடே அறியும். வீதியோர நடைபாதைகளில் நின்று ஷேட் விற்ற நீங்கள் இன்று தாஸ கூட்டு நிறுவனங்களின் அதிபதியாக இருக்கிறீர்கள். உங்களின் இந்த வளர்ச்சியைப் பற்றி விவரிக்க முடியுமா?

*பதில்:* நான் தென்பகுதியில் உள்ள தெனுவர என்ற இடத்திற்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். எனது சகோதரர்கள் என்னைக் கொழும்புக்கு அழைத்து வந்து பஞ்சிகாவத்தையில் உள்ள பாடசாலை ஒன்றில் சேர்த்தனர். பாடசாலையில் படிக்கும்போதே சகமாணவர்களுக்கு இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்தேன்.

அதன் பின்பு மருதானை வீதி ஓரங்களில் பெனியன்களை விற்று வந்தேன். அந்தக் காலப்பகுதியில் சிறுவர்கள் வீதியோர வியாபாரத்தில் ஈடுபடமுடியாது. எனவே, பொலீஸார் சுற்றிவளைக்கும்போது ரயில் நிலைய களஞ்சியத்திற்குள் ஒளிந்து தப்பிக்கொண்ட சம்பவங்கள் பல உள்ளன. சிறிது காலத்தின் பின்பு சந்தைகளில் தள்ளுவண்டி மூலம் ஆடைகளை விற்றுவந்தேன்.

எனினும், முன்னேறவேண்டும் என்ற இலட்சியம் எப்போதும் எனக்குள் இருந்தது. அதை அடைவதற்காக செயற்பட்டு வந்தேன். எனது வியாபாரத்தை ஆரம்பித்த விதத்தையும் தற்போது அது தாஸ கூட்டு நிறுவனமாக வளர்ந்திருப்பதையும் பார்க்க எனக்கே ஆச்சரியமாகவுள்ளது.

*கேள்வி:* நீங்கள் ஒரு வர்த்தகராக இருக்கும் அதேவேளை, சமூக சேவைகளையும் செய்து வருகிறீர்கள் அதுபற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* ஆம். முதலில் 'கம்சீலி உதா சமுலுவ' என்ற செயற்றிட்டத்தை ஆரம்பித்தேன். அதன்மூலம் ஏழை மக்களுக்குத் தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தேன். அதன்கீழ் தென்பகுதியில் தும்புக் கைத்தொழிலை ஆரம்பித்தேன். நான் ஜேர்மனிக்குச் சென்றிருந்தபோது தும்பு மூலம் கம்பனி செய்யும் முறையைக் கண்டேன். அதுபற்றிய மேலதிக விவரங்களைச் சேகரித்த பின்பு அத்தொழிலை இலங்கையில் ஆரம்பித்து அந்நியச் செலாவணி வருவாயைப் பெறமுடிவுசெய்தேன்.

அதற்காக நீர்கொழும்பு முதல் தங்கல்லை வரையிலான பகுதிகளில் தும்புக் கைத்தொழிலை ஆரம்பித்தேன். அப்போது ஆண்டு 1997. நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது.

இதைத்தவிர, மாமரங்களை வளர்க்கும் செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்தேன். 25 மாமரக் கன்றுகளைப் பகிர்ந்துகொடுத்து ஊக்கம் அளிக்கும் திட்டம் இது. அதனை மேலும் விஸ்தரிக்க அரசிடம் அனுமதி கோரியபோது அனுமதி கிடைக்கவில்லை. அனுமதி கிடைத்திருந்தால் ஏழாயிரம் பேர் தொழில் பெற்றிருப்பார்கள்.

*கேள்வி:* இதற்கு ஏன் அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை என்று கருதுகிறீர்கள்?

*பதில்:* எமது நாடு அப்படிப்பட்டது. அரசியல் பழிவாங்கல்கள் மேலோங்கியுள்ளன. இன்றும் அப்படித்தான; நாளையும் அப்படித்தான். நான் இன்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாகிறேன்.

*கேள்வி:* நீங்கள் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாகியதாகக் கூறினீர்கள். அவை உங்கள் வர்த்தகத்தைப் பாதித்துள்ளனவா?

*பதில்:* 'கம்சீலி உதா சமுலுவ' மூலம் இந்நாட்டிற்கு வெளிநாட்டு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கவே முயற்சிசெய்தேன். மாமரங்களை நடுவதற்கு காணி கேட்டேன் பல நாள்களாக என்னை அலைய வைத்து விட்டு இறுதியில் நிராகரித்துவிட்டனர். பின்னர் கஜு மரச்செய்கைக்கு முயற்சித்தேன். அதற்கும் இடமளிக்கவில்லை. பரிசீலனை செய்வதாக அதிகாரிகள் கூறினார்கள். அவ்வளவு தான், 1977இல் ஆட்சிமாறியதில இருந்தே எனக்கு அடிவிழ ஆரம்பித்தது. நான் பெற்ற வங்கிக் கடன்களுக்காக எனது சொத்துக்களை ஏலம் விடப்போவதாகவும் அச்சுறுத்தப்பட்டது.

எனது அனைத்துச் சொத்துக்களையும் பிணையாக வைத்தே கடன்பெற்றேன். இரண்டாயிரம் லட்சம் ரூபாவைப்பெற இருபத்திரண்டு லட்சம் பெறுமதியான சொத்துக்களைப் பிணையாக வைத்தேன்.

என்னைப் பல்வேறு வகைகளில் பழிவாங்கியுள்ளனர். பத்திரிகைகள் மூலமும் எனக்குச் சேறு பூசப்பட்டது. வரித்திணைக்களமும் எனது கணக்குகளைப் பலமுறை பரிசீலனை செய்துள்ளது. வழக்கும் தொடர்ந்தார்கள். இவற்றைப் பற்றி கடந்த அரசாங்க காலத்தில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களிடம் முறையீடு செய்தேன். விசாரணைகள் நடத்தப்பட்டன. பின்பு எனது காணிகளைத் திருப்பிக்கொடுக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. அவ்வாறே என் காணிகள் கிடைத்தன. எனது வெற்றிப் பயணத்தின் வேகத்தைக் குறைக்கவே இந்தச் சம்பவங்கள் நடந்தன.

*கேள்வி:* உள்நாட்டு வர்த்தகர்களோ அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு இந்த நிலைமை இல்லை. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

*பதில்:* அது உண்மை. இலங்கையர் ஒருவர் முன்னேறுவதை நம் நாட்டவர்கள் சிலர் அனுமதிப்பதில்லை. பொறாமைப்படுகிறார்கள். அதனால் தான் எமது நாடு முன்னேறுவதில்லை. எமது வர்த்தகத்திற்கும் இதுதான் நேர்ந்திருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டுமாயின் நாட்டுப்பற்றுள்ளவர்கள் அரச பதவியேற்க வேண்டும்.

*கேள்வி:* உங்களிடம் ?ஆயிரம் பேர்வரை பணிபுரிகிறார்கள். ஆனால், இதுவரையும் தாஸ கூட்டு நிறுவனங்களில் எந்த ஒரு வேலைநிறுத்தமும் நடந்ததில்லை. இந்த நிலைமையை எவ்வாறு பேணுகிறீர்கள்?

*பதில்:* நான் எப்போதும் ஊழியர்களுக்கு உதவி செய்கின்றேன். நான் செய்துள்ள உதவிகளைப் பார்த்தால் உலகில் எந்த ஒரு நிறுவனமும் அவ்வாறு செய்திருக்காது. 1975இல் 36.5லட்சம் ரூபா இலாபத்தை ஊழியர்களிடையே பகிர்ந்தளித்தேன். பல வசதிகளைச் செய்துகொடுத்தேன். ஏழைமக்கள்தான் எம்மிடம் வேலை செய்கிறார்கள். அவர்கள் எதனையும் கேட்டு சத்தம்போடுவதற்கு முன் நாம் அதனைக் கொடுத்துவிட வேண்டும். இன்றுவரை எனது ஊழியர்கள் எவரும் வேலைநிறுத்தம் செய்ததோ, ஊர்வலம் சென்றதோ கிடையாது.

*கேள்வி:* நீங்கள்தான் முதன்முறையாக கிராமிய வங்கி முறையை அறிமுகப்படுத்தினீர்கள். அது சாதாரண வங்கி நடைமுறையிலிருந்து வேறுபட்டது. எமது வங்கி நடைமுறைகளில் பல சிக்கல்கள் உள்ளன. இது மாற்றப்பட வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்களா?

*பதில்:* வங்கி சட்டதிட்டங்களும் நடைமுறைகளும் மாற்றப்படவேண்டும். இதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுப்பது அவசியம்.

*கேள்வி:* நாடு சுதந்திரம் பெற்ற பின்பு கடந்த ஆண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் அதிக அளவில் வீழ்ச்சி அடைந்தது. இதனால் வர்த்தகர்களும் பாதிப்படைந்தனர். பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாடு மீள்வதற்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

*பதில்:* நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமாயின் உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு காண வேண்டும் உணவு இறக்குமதிகளுக்கு அதிக வரி விதிக்கவேண்டும். அப்போது எமது தேசிய உணவு உற்பத்தி பாதுகாக்கப்படும். நாட்டிலுள்ள மூலப்பொருள்கள் இனங்காணப்படுவது அவசியம். அப்போதுதான் அவற்றின் மூலம் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடமுடியும்.

இதற்குச் சரியான இலக்கும் திட்டமிடலும் தேவைப்படுகின்றன. இது அந்தந்தத் துறைசார்ந்த அமைச்சுக்களுக்கும் இருக்கவேண்டும். பொருளாதார கொள்கைகள் வகுக்கப்படும் போது, வர்த்தகர்களது கருத்துக்களும் பெறப்படுவது முக்கியமாகும்.

*கேள்வி:* நீங்கள் ஒரு சிறந்த வர்த்தகர்; சிறந்த முகாமையாளர் மற்றும் சிறந்த வரி செலுத்துநர் என்று முன்னாள் நிதி அமைச்சர் டாக்டர் என்.எம்.பெரேரா ஒருமுறை நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார். இவ்வாறு பெருமைக்குரிய நீங்கள் இன்று பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. உங்களது வர்த்தகத்தைத் தீர்மானிப்பவர்கள் யார்? அரசியல்வாதிகளா அல்லது வங்கியாளர்களா?

*பதில்:* நான் எவ்வித தவறும் செய்யவில்லை. எனது கருத்துக்களை வங்கிகளிடம் முன்வைத்துள்ளேன். எனினும், அதிகாரிகள் அவற்றை உதாசீனப்படுத்திவிட்டு என்மீது வழக்குத் தொடர்ந்தமை அவர்களின் தவறு. எனக்கு கோட்டாக்களைப் பெற்றுத் தரவில்லை. நான் பல இடையூறுகளுக்கு மத்தியில் வர்த்தகம் செய்து வருகிறேன். கட்டியெழுப்பிய வியாபாரம் ஒன்றை இழுத்து மூடுவது திறமையல்ல. வங்குரோத்துநிலை ஏற்பட்டால் அதனை மூடிவிடலாம். எனது வியாபாரத்தை அப்படிச் செய்ய சிலர் முயற்சித்தனர்.

கை, கால்களைக் கட்டிவைத்து, வாயில டேப் ஒட்டிக்கொண்டு வேலை செய்யச் சொல்கிறார்கள். நான் எனது நாட்டிற்குச் சேவை செய்ய விரும்புகிறேன். எனக்கு அதற்கு இடம் கொடுங்கள்.

இந்த உலகத்தை விட்டுச்செல்லும்போது நாம் எடுத்துச் செல்வது ஏதோ நான்கு மரத்துண்டுகளைத் தான். நாம் செய்த காரியங்கள்தான் எஞ்சப்போகின்றது. ஒரு லட்சம் பேருக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் நான் திட்டம் வகுத்திருந்தேன் அது முடியாமல் போய்விட்டது. எல்லாம் இறைவன் பார்த்துக்கொள்வார் - இவ்வாறு கூறினார் தாஸ முதலாளி.

## வீரமாகாளி அம்மன் ஆலய விவகாரம்:

## விசாரிக்க யாழ்.ஆரம்ப நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இல்லை என்று தீர்ப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் விவகாரம் தொடர்பான வழக்கை விசாரணை செய்ய யாழ். ஆரம்ப நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இல்லை. யாழ்.மாவட்ட நீதிமன்றமே இந்த வழக்கை விசாரிக்க முடியும் என்று வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேற்படி ஆலய விவகாரம் தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான விசாரணையை மேற்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இந்தக் கோயில் சம்பந்தமாக யாழ்மாவட்ட நீதிமன்றில் முடிவுறாத நிலையில் உள்ள வழக்கிலேயே கோயில் நிர்வாகம் தொடர்பாகவும் நம்பிக்கைப் பொறுப்பாண்மை தொடர்பாகவும் கோயிலின் நடைமுறை ஒழுங்குகள் தொடர்பாகவும் தீர்மானிக்க முடியும் என்றும் -

ஆரம்ப நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லாததால் அந்த நீதிமன்றம் வழங்கிய கட்டளைகள் சட்ட வலுவற்றன என்றும் - மேல் நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## பெருந்தோட்டத்துறை அமைச்சர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல நாளை இங்கு வருகைதரவுள்ளார்.

நாளை காலை வருகை தரவுள்ள அமைச்சர் 9.30 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொள்வதுடன் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு இலவசமாக தென்னங்கன்றுகளை விநியோகம் செய்வார். மாலை 4 மணியளவில் அச்சுவேலிப் பகுதிக்குச் சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள தென்னம் நாற்று மேடையை அமைச்சர் பார்வையிடுவார். அமைச்சருடன் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர் லிங்கன் பெர்னாண்டோவும் வருகைதரவுள்ளார். (எ-10-5)

# வடமராட்சியில் பட்ட சீசன் ஆரம்பம்

வடமராட்சிப் பிரதேசத்தில் பட்டம்விடும் சீசன் ஆரம்பமாகியுள்ளது. சிறார்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை பட்டம் பறக்கவிடுவதில் பொழுது போக்காக ஈடுபட்டுள்ளனர்.

பல்வேறு உருவ அமைப்புகளைக் கொண்ட பட்டங்கள் விண் ஒலியுடன் வானில் பறப்பதைப் பரவலாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் பட்டம் பறக்கவிடும் சீசன் நிறைவுறும். (ம-173)


## விற்பனைக்கு

**சுன்னாகம், இல.68, மின்சார நிலைய வீதியில் (நெல் ஆலைக்கு அருகில்) 3 PHASE மின்சார வசதியுடன் சுற்றுமதில், வற்றாக்கிணறு, தண்ணீர்த்தாங்கி, திருத்தி அமைக்கக்கூடிய 8000 சதுர அடியில் கட்டடமும், 2500 சதுர அடியில் தளமும் உடைய - எந்த வித தொழிற்சாலைக்கு உகந்த வசதிகளுடன்கூடிய பரப்பு 15 - குளி 7, விஸ்தீரணமுள்ள காணி உடன் விற்பனைக்கு உண்டு.**

*விவரங்களுக்கு:*

**எஸ்.ஜே.இராஜசிங்கம்,**
**"லோட்ஸ் வில்லா"**
**சூறாவத்தை,**
**சுன்னாகம்.**

(11971)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண் மகிழ 1940 - 11 - 22



கண் நெகிழ 2002 - 11 - 20

### தேவசகாயம்பிள்ளை பிரான்சிஸ் தேவராஜா

*(இளைப்பாறிய தொழிநுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன திணைக்களம்)*

அன்பின் திருவுருவாய்
நந்தைக்கோர் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பக்தியின் சின்னமாய்
முப்பத்தொரு நாள்கள் தான் மறைந்தனவே
ஆறவில்லை எம்துயர் காயவில்லை
கண்களில் ஈரம் காலம் வேகமாகக் கரையலாம்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
வாழும் ஜீவன்கள் நாம்.

எம்தெய்வத்தின் மரணச் செய்திகேட்டு பல வழிகளிலும் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்று (20.12.2002) அடைக்கல அன்னை ஆலயத்தில் ஆன்ம இளைப்பாற்றுப் பூசைப்பலி 11.00 மணி(புதிய நேரம்)க்கு ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. அதில் கலந்து மன்றாடுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நீங்காத நினைவுடன் நித்தம் நினைவு கூரும்:*
மனைவி, மகள், சகோதரி, உற்றார், உறவினர்கள்.

*இல.98, வேம்படி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(11974)

## நுளம்பு வலைகளுக்கு மருந்து விசிறும் பணி

சண்டிலிப்பாய்,டிசெ.20

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நுளம்பு வலைகளுக்கு 'பெமர்த்திரின்' எனப்படும் நுளம்பு கொல்லி மருந்து தோய்த்து கொடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் அராலி, வட்டுக்கோட்டை முதலிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் நுளம்பு வலைகளுக்கு இம்மருந்து தோய்த்து கொடுக் கப்பட்டது.

எதிர்வரும் 27ஆம் திகதி சங்கானை - சண்டிலிப்பாய் பிரதான வீதியிலுள்ள மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து நுளம்பு வலைகளுக்கு இம் மருந்து தோய்த்து கொடுக்கப்படும் என்றும்.

ஏற்கனவே இப்பணிமனையில் வழங்கப்பட்ட நுளம்பு வலைகளை பெற்றுக்கொண்டவர்கள் அதனை கொண்டுவந்து மருந்தினை தோய்த்துக் கொள்ளலாம் என மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி ஜே. கணேஸ்வரராசா அறிவித்துள்ளார்.

இப்பகுதியில் நுளம்பு வலை வைத்திருக்கும் ஏனைய பொது மக்களும் இத் தினத்தில் அதனைக் கொண்டு வந்து மருந்து தோய்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

(எ-135)

## நெற்பயிர்களை நாசம் செய்யும் மடிச்சுக்கட்டி

சண்டிலிப்பாய்,டிசெ.20

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் நெற் பயிர்களை மடிச்சுக்கட்டி நோய் பாதித்து வருகின்றது.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் கிருமிநாசினியை தெளிகருவிமூலம் தெளித்து வருவதை அவதானிக்கமுடிகின்றது.

(எ-135)

## மலசலகூட வசதியின்றி வியாபாரிகள் சிரமம்

சண்டிலிப்பாய்,டிசெ.20

சங்கானை மரக்கறிச் சந்தையில் மலசலகூட வசதியின்மையால் அங்கு வியாபாரம் செய்பவர்களும், சந்தைக்குப் பொருள்கள் வாங்க வருவோரும் சிரமமடைந்து வருகின்றனர்.

இதனால், சந்தையின் பல பகுதிகளிலும் துர்நாற்றம் வீசி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - மேற்படி சந்தையில் மலசலகூடம் ஒன்று அவசியம் நிறுவப்படவேண்டும் என சங்கானை பொதுச் சுகாதார பரிசோதகர் வலி. மேற்குப் பிரதேச சபைக்கு அறிவித்திருந்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)


**CANADA STUDENT VISA**

கனடாவில் Student Visa பெறுவது தொடர்பான விவரங்களுக்கு:
*இல.140, பலாலி வீதி,*
*பரமேஸ்வராச் சந்தி,*
திருநெல்வேலி. T.P.No: 222 2478
(11979)





## ஜோதிடம்



இந்திய பரம்பரை ஜோதிடர் **அருள்வாக்கு அம்பிகா அம்மா** முதல்முறையாக யாழ். மாநகருக்கு வருகை.

கைரேகை, **ஜாதகம்** பார்க்கப்படும். **ஜாதகம்** எழுதிக்கொடுக்கப்படும்.

எந்த வகையான பிரச்சினைகளானாலும் ஜாதக ரீதியாக உங்களுக்குச் சரிசெய்து கொடுக்கப்படும். நீங்கள் வாழ்வில் வெற்றியும் நிம்மதியும் அடைய இன்றே **அருள்வாக்கு அம்பிகா** அம்மாவைச் சந்திக்கவும்.

கொழும்பு மற்றும் வவுனியாவில் **அம்மா**விடம் வாக்குக்கேட்டுப் பலன் அடைந்தோர் அநேகர்.

நீங்களும் நற்பலனடைய அம்மாவை உடன் சந்திக்கவும்.

*சந்திக்கும் இடம்:* **அருள்வாக்கு அம்பிகா அம்மா,**
**மடோனா லொட்ஜ்**
**121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(லிங்கன் கிறீம் ஹவுஸ் அருகில்)
(11715)

பார்க்கும் நேரம்: *காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை.*


## இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு

### ஆலயங்கள் சமய நிறுவனங்களுக்கான காசோலைகள் வழங்கும் வைபவம்

*காலம்:* **22.12.2002 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி** *(புதிய நேரம்)*

*இடம்:* **நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலிலுள்ள நாவலர் மணிமண்டபம்**

*தலைவர்:* **திரு.க.பரமேஸ்வரன்**
*(செயலாளர் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு)*

*பிரதமவிருந்தினர்:* **மாண்புமிகு அமைச்சர்**
**திரு.தி.மகேஸ்வரன் அவர்கள்**

காசோலைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார். காசோலை பெறுவோர் ஆலயம், சமய நிறுவனத்தின் அலுவலகக் கடிதத் தலைப்பு, அலுவலக ரபர் முத்திரை, காசோலை பெற வருபவர்களின் தேசிய அடையாள அட்டை, ஆலயநிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கடிதம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். பத்திரிகைகளில் வெளிவந்த ஆலயங்களும், இந்து நிறுவனங்களும் மற்றும் நேரில் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டவர்களும் இக்கொடுப்பனவுகளைப் பெறமுடியும்.

**க.பரமேஸ்வரன்**
*செயலாளர்,*
*இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு,*
*கொழும்பு 04.*
(C/25500)

## மரண அறிவித்தல்

### திருமதி சீனிவாசகம் தையல்முத்து

பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீனிவாசகம் தையல்முத்து நேற்று (19.12.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா செட்டியார் சீனிவாசகம் (இளைப்பாறிய ஆசிரியர், வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரையப்பா செட்டியார் - கிட்டம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கைலாயஞ்செட்டியார் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பழனிச்சாமி, முத்துக்குமாரசாமி, நாகேஸ்வரி மற்றும் சின்னையா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணார்பண்ணை கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*447, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(11977)

தகவல்: க.சின்னையா
(சகோதரன்)

உ
கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

# ஈழத்து சிதம்பரத்தில் இன்று இரதோற்சவம்



"காரையம்பதி ஐயனார் ஆலயத்திற்கு செல்லுவோம்
மணிகண்டா சரணம் என்று சொல்லுவோம்"
சங்கடங்கள் யாவற்றையும் வெல்லுவோம்
கதியென்று வருவோர்க்கு விதியென்ன சொன்னாலும்
கைவிடாத தெய்வம் காரை ஆண்டிக்கேணி ஐயன்.
எத்தனை கண்கள் இருந்தாலும் அத்தனை கண்களும்
போதாது இன்று சிதம்பரத்தில் பஞ்சரதபவனி காண்பதற்கு.



அந்தப் பதியில் கண்ணனும் நீ, கணபதியும் நீ, கந்தனும் நீயே! எங்கள் காவல் தெய்வம்.

பரமசிவன் விஷ்ணுவும் நீயே அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியுமாகிய தயவும் கருணையும் கொண்ட அபயம் அளிக்கவல்ல கைகூப்பி நிற்கும்போது மெய்சிலிர்க்க வைக்கும் எண்ணியதை திண்ணமுற செய்திடும் என்றும் உள்ள பரம்பொருள் இனியவன், பூரணை

இலங்கை, இந்திய கூட்டு நாதஸ்வர மேதைகளின் மங்கள வாத்தியங்கள் முழங்க மக்கள் போடும் சரணகோசம் வானத்தைப் பிளக்க மக்கள் பக்தி வெள்ளத்தில் மிதந்துவந்து அருள்மழை பொழியும் கண்கொள்ளாக்காட்சியை காண வாரீர்.

**ஆக்கம்: வன்புலி வாகனனை வணங்கும், காரை மணிகண்டன்.**

(11975)

## உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரர் விருது:

# மூன்றாவது தடவையாக வென்று பிரேஸில் வீரர் ரொனால்டோ சாதனை

உலகில் சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான விருதை பிரேஸில் வீரர் ரொனால்டோ மூன்றாவது தடவையாக வென்று சாதனைபடைத்துள்ளார்.

2002ஆம் ஆண்டின் சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் விருது செவ்வாயன்று இரவு ஸ்பெயினில் வழங்கப்பட்டது.

இவ்விருதிற்கான இறுதிச் சுற்றில் ரொனால்டோ, பிரான்ஸ் வீரர் ஸினடின் ஸிடன், ஜேர்மன் வீரர் ஒலிவர் கான் ஆகியோர் தெரிவாகியிருந்தனர்.

148 தேசிய அணிகளின் பயிற்றுநர்களின் வாக்குகள் மூலம் விருதுக்குரியவர் தெரிவுசெய்யப்பட்டார்.

ரொனால்டோவுக்கு முதலிடத்திற்கான 59வாக்குகள் உட்பட 357 புள்ளிகள் கிடைத்தன.

2ஆம் இடம்பெற்ற ஒலிவர்கானுக்கு 171 புள்ளிகள் கிடைத்தன. 1998, 2000ஆம் ஆண்டுகளில் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட ஸினடின் ஸிடனுக்கு இம்முறை 3ஆம் இடம் கிடைத்தது. அவருக்கு 141 புள்ளிகள் கிடைத்தன.

ரொனால்டோ 1996, 1997 ஆம் ஆண்டுகளிலும் உலகின் சிறந்த வீரருக்கான விருதை வென்றார். இவ்விருதை 3 தடவை வென்ற முதல் வீரர் ரொனால்டோ ஆவார்.

அவர், கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆகக்கூடுதலான கோல்களை (8) அடித்தார். இதற்கான தங்கப் பாதணி விருதும் செவ்வாயன்று நடைபெற்ற வைபவத்தில் ரொனால்டோவிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, உலகில் சிறந்த உதைபந்தாட்ட வீராங்கனைக்கான விருதை அமெரிக்காவின் மியாஹம் வென்றார். கடந்த வருடம் முதல் தடவையாக இவ்விருது வழங்கப்பட்டது. அவ்வருடமும் மியாஹம் இவ்விருதை வென்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த தடவை போன்றே இம்முறையும் மியாஹம் 161 புள்ளிகளைப் பெற்றார். ஜேர்மன் வீராங்கனை பிரிகிட் பிரின்ஸ் 96 புள்ளிகளையும் கடந்த தடவை இரண்டாம் இடம் பெற்ற சீன வீராங்கனை சுன்வென் 58 புள்ளிகளையும் பெற்றனர்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருது சிறந்த கோல் காப்பாளருக்கான யாஷின் விருது மற்றும் வருடத்தின் இரண்டாவது சிறந்த வீரருக்கான விருது ஆகிய மூன்று விருதுகளும் செவ்வாயன்று ஒலிவர்கானுக்கு வழங்கப்பட்டன.

ரொனால்டோவுக்கு உலகக் கிண்ணப் போட்டிகளின் இரண்டாவது சிறந்த வீரருக்கான வெள்ளிப் பந்து விருதும் வழங்கப்பட்டது.

இவ்வருடம் ஐரோப்பாவின் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருது, உலகக் கால்பந்தாட்ட சஞ்சிகையின் சிறந்த வீரருக்கான விருது ஆகியவற்றையும் ரொனால்டோ பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-5)

# இந்தியா - நியூஸிலாந்து டெஸ்ட் முதல்நாள் ஆட்டம் கைவிடப்பட்டது

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் கடும் மழை காரணமாக கைவிடப்பட்டது.

ஹெமில்டன் நகரில் நேற்று இப்போட்டி ஆரம்பமாகவிருந்தது. புதனன்று இரவு பெய்த மழை காரணமாக இம்மைதானத்தில் போட்டியை நடத்தும் நிலை இருக்கவில்லை.

நடுவர்களான அசோக் டி சில்வாவும் டேரில் ஹார்பரும் 3 தடவை மைதானத்தைப் பரிசோதித்தனர். மதிய இடைவேளையின் பின் முதல் நாள் ஆட்டத்தை கைவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. நேர இழப்பை ஈடுசெய்வதற்காக போட்டியின் ஏனைய 4 தினங்களும் மேலதிகமாக ஒரு மணித்தியால ஆட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடும் அணியை விட இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணி 150 ஓட்டங்கள் குறைவாகப் பெற்றால் ∴பொலோ ஒன் நிலைக்குத் தள்ளப்படும். வழமையாக 5 நாள் போட்டிகளில் 200 ஓட்டங்கள் குறைவாகப் பெற்றால் மாத்திரமே ∴பொலோ ஒன் நிலையை எதிர்நோக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. நேற்று இரு தரப்பினரும் தனது 11 பேர் அணியை அறிவிக்கவில்லை.

(ம)

# உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான இந்திய வீரர்கள் விவரம் அறிவிப்பு

விளையாட்டு

எதிர்வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் மற்றும் நியூஸிலாந்துடனான ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணி ஆகியனவற்றின் விவரம் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகள் வரை சௌரவ் கங்குலி தொடர்ந்தும் தலைவராக நீடிக்கவுள்ளார்.

30 பேர் கொண்ட உலகக் கிண்ணக் குழாம் கடந்த நவம்பர் 30ஆம் திகதிக்கு முன் அறிவிக்குமாறு சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் கோரியிருந்தது. எனினும் விளம்பர ஒப்பந்தம் தொடர்பான சர்ச்சை காரணமாக இந்திய அணி அறிவிப்பு தாமதமாகியது.

இக்குழாமில் இடம்பெற்றுள்ள இளம் புதிய வீரர்களில் ரோஹன் கவாஸ்கர், வேகப்பந்து வீச்சாளர்களான இர்பான் பதான், அவிஷ்கர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

'ஐ.சி.சி. விதிகளின்படி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான 15 பேர் கொண்ட அணி எதிர்வரும் 31ஆம் திகதி அறிவிக்கப்படும்.' - இவ்வாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் கருணாகரன் நாயர் தெரிவித்தார். ஆனால், அதற்கான உத்தரவாதம் எதுவும் வழங்க முடியாது எனவும் அவர் கூறினார்.

நியூஸிலாந்துடனான ஒருநாள் போட்டிகளுக்கு 14 பேர் கொண்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வீரர்களின் திறமையை அவதானிக்கும் வரை 16 வீரர்களின் பெயர்களையும் அறிவிக்க விரும்பவில்லை என நாயர் கூறினார்.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான 30 பேர் குழாம்:

சௌரவ் கங்குலி (தலைவர்), வீரேந்தர் ஷேவாக், சச்சின் டெண்டுல்கர், ராகுல் திராவிட், மொஹமட் கைப், யுவராஜ்சிங், சஞ்சய் பங்கார், சஹீர் கான், ஜகவல் ஸ்ரீநாத், ஹர்பஜன் சிங், அனில் கும்ப்ளே, அஜித் அகர்கர், பார்த்திவ் பட்டேல், வி.வி.எஸ். லஷ்மன், ரினு யொஹானன், ராகேஷ் பட்டேல், தினேஷ் மொங்கியா, கௌதம் காம்பீர், சரந்திப் சிங், முரளி கார்த்திக், ஆஷிஸ் நெஹ்ரா, லஷ்மிபதி பாலாஜி, ஜெய்பிரகாஷ் யாதவ், ரீதிந்தர் சிங் சோதி, இர்பான் பதான், தீப்தாஸ் குப்தா, ரோஹன் கவாஸ்கர், வெங்கடேஷ் பிரசாத், சாய்ராஜ் பகுதலே, அவிஷ்கர் சால்வி,

நியூஸிலாந்துடனான ஒருநாள் போட்டிகளுக்கான அணி :

கங்குலி, ஷேவாக், டெண்டுல்கர், திராவிட், கைப், யுவராஜ், சஹீர் கான், ஸ்ரீநாத், ஹர்பஜன், கும்ப்ளே, அகர்கர், பட்டேல், லஷ்மன். (ம)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது நிறைவு விழாச் சபையினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணிக்கு- புத்தூர் எவரெஸ்ட் வி.க. அணி எதிர் கலட்டி ஐக்கிய வி.க. அணி.

★ பிற்பகல் 4.30 மணிக்கு - வதிரி டயமன்ஸ் வி.க. அணி எதிர் கொக்குவில் பொற்பதி வி.க. 'பி' அணி.

(ம-5-86)

# ஆஸி.பகிரங்க போட்டிகளில் மார்டினா நவரத்திலோவா

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் போட்டிகளில் சிரேஷ்ட வீராங்கனை மார்டினா நவரத்திலோவா பங்குபற்றவுள்ளார்.

இத்தொடரின் இரட்டையர் போட்டிகளில் நவரத்திலோவா பங்குபற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸி. பகிரங்க போட்டிகளுக்கு முன்னதாக நடைபெறவுள்ள கோலட் கோஸ்ட் சுற்றுப்போட்டியிலும் மார்டினா நவரத்திலோவா பங்குபற்றவுள்ளார். டிசெம்பர் 29 முதல் ஜனவரி 4ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. 45 வயதான மார்டினா நவரத்திலோவா மகளிர் டெனிஸ் சங்கத்தின் ஒற்றையர் போட்டிகளில் 167 தடவை சம்பியனாகினார். இவற்றுள் 18 கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டங்களும் அடங்கும். (ம)

## தெல்லிப்பழை முருகன் ஆலயம் குறித்து

# இந்து கலாசார அமைச்சு கவனமெடுக்க வேண்டுகோள்

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றுடன் இணைந்து காணப்படும் முருகன் ஆலயம் கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் கடுமையாகச் சேதமடைந்து காணப்படுகிறது.

இவ்வாலயத்தை திருத்தி அமைப்பதன்மூலம் புற்றுநோய் சிகிச்சைக்கு வருபவர்களுக்கு மனச்சாந்தி கிடைக்கக்கூடியதாக இருக்குமென கருதப்படுகிறது.

சுற்றிவர உடைந்த கட்டடங்களுக்குள்ளும், பற்றைக்குள்ளாலும் சென்று சிகிச்சை பெறுபவர்களுக்கு ஆலயங்களே வைத்தியசாலைச் சூழலில் மன அமைதியை கொடுக்கமுடியும்.

இதன் அடிப்படையில் இவ்வாலயத்தை திருத்தி அமைக்க இந்து கலாசார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பலரும் விரும்புகின்றனர்.

(ஓ-86)

## குடியிருக்க வீடுகள் இல்லை:

# வன்னியிலிருந்து மீளக்குடியமரவந்த வலி.வடக்கு மக்கள் நடுத்தெருவில்

வலி.வடக்கு,டிசெ.20

வன்னியில் இருந்து மீளக்குடியமரும் நோக்குடன் யாழ்ப்பாணம் வருகைதந்த வலி.வடக்கைச் சேர்ந்த சுமார் 400 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இருக்க வசதியின்றித் திண்டாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மேற்படி பகுதி மக்கள் வன்னி மற்றும் குடாநாட்டின் பல்வேறு அகதிமுகாம்களில் வசித்து வந்தனர்.

1995ஆம் ஆண்டு இடம்பெயர்வைத் தொடர்ந்து வன்னி சென்ற இவர்கள் ஏ-9 வீதி திறக்கப்பட்டதை அடுத்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

இவர்கள் ஏற்கனவே வசித்து வந்த வீடுகளில் வேறு நபர்கள் குடியிருப்பதனால் தற்போது இயங்கும் அகதிமுகாம்களிலும் இவர்கள் வசிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில் மீளக்குடியமர்வதற்கென வருகைதந்த வலி. வடக்கு பகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாகக் கூறப்பட்டது. (எ-86)

# குருநகர் மீனவர் தாக்கப்பட்டமை படை அதிகாரி வாக்குமூலம்

கடந்த மாதம் 25ஆம் திகதி குருநகர் இறங்குதுறையில் வைத்து மீனவர் சங்க உப தலைவர் செபமாலை மத்தியூஸ் படையினரால் தாக்கப்பட்டமை தொடர்பாக குருநகர் பகுதி இராணுவ அதிகாரி நேற்றுமுன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரியிடம் வாக்குமூலமளித்தார்.

நேற்றுமுன்தினம் விசாரணைகளை நடத்துவதற்கு இரு தரப்பினருக்கும் ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், தாக்குதலுக்கு உள்ளான சங்கத்தின் உப தலைவரான செபமாலை மத்தியூஸ் சமுகமளிக்காத காரணத்தினால் விசாரணை நடைபெறவில்லை.

இதனையடுத்துப் படை அதிகாரியின் வாக்குமூலத்தைப் 'பதிவு' செய்த ஆணைக்குழு அதிகாரி பிறிதொரு தினத்தில் விசாரணை இடம்பெறுமென்று தெரிவித்தார். (எ-10-5)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2280648 இருந்து 2298062 வரை

சீட்டிழுப்பு இல. 1359

திகதி 18.12.2002

வெற்றி எண்கள்

18 20 23 51 57

போனஸ் எண் 08

ஜக்பொட் பரிசு

ரூபா.2,347,150/- வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,347,150/- | 2,347,150/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 105 | 10,000/- | 1,050,000/- |
| 3 | 5,504 | 500/- | 2,752,000/- |
| 2 | 91,846 | 20/- | 1,836,920/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 18ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 112,391 | 10/- | 1,123,910/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.9,209,980/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா. 1,500,000/-

தொடர் இல. 3274250க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 21ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை.
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சீட்டிழுப்பில் பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2294575-5-78
2284245-4-82
2280786-1-59
2291556-8-02
2291295-9-25

PHOENIX

KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS

KINGS ELECTRONICS

Intel Pentium - III 1200 MHz Computer

Intel Pentium - III 1200 MHz Processor with
256 KB Cache Memory :-
GIGA Byte Motherboard & 32 Bit Sound
60 GB Hard Disk Drive
128 SDRam
15" S.V.G.A Samsung Color Monitor
8 MB AGP VGA Card
1.44 MB Floppy Disk Drive
ATX Tower Case
108 Win 98 Keyboard
Mouse & Pad
1200W Soundstar Speaker
52X CD ROM Drive
Dust Cover
Filter Glass

53250/=

புதுவருட மலிவு விற்பனை
அனைத்து Audio Cdகளும்
10%, 20% கழிவுடன்
பெற்றுக்கொள்ளளாம்

எமது திறுவனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.

T.V, VHSடெக், VCDடெக், MP3 டெக், DVD டெக், Audio Cd, Video Cd, DVD, Empty Cds, Stand Fans, Stabilizer, Eurostar Receiver, Satellite Antenna (USA) மற்றும் தரமான எலெக்ரோனிக் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

AKAI, YAMAHA
Audio Deck (GX), Amplifiers
(Made In Japan)

ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு.

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்

No 64, Stanley Road, Jaffna TEL. NO : 021-2223857 இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS

CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR

வலியா . நோவா வேதனையா ?

CONYBIO FIR

ELBOW, ANKLE & KNEE BRACE



◄ பாதம், முழங்கை தசைப் பகுதிகளை மிருதுவாக்கி இதமூட்டுகிறது.
◄ மூட்டுவலிகளுக்கும் தசைப் பிடிப்புக்கும், வேதனை குறைப்பிற்கும் உன்னதமானது
1800/-

BIO CHITOSAN BELT



ஆண்மை சக்திக்கும், முதுகு வலிக்கும் நிவாரணி ►
இடுப்பைச் சுற்றிய பலவீனமான பகுதிகளுக்கு புத்துணர்வளிக்கின்றது ►
நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகின்றது ►
8500/-

SOCKS



◄ பக்றீரியா கிருமிகளையும் துர் நாற்றத்தினையும் ஒழிக்கிறது.
◄ பாதிப்படைந்த உடற் பாகங்களை பாதுகாத்து வலுவடையச் செய்கிறது
◄ பாதத்தின் அடிப்பகுதியை மிருதுவாக்கி உணர்ச்சியற்ற பாகங்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கின்றது.
480/-

T-SHIRTS



இதயம், நுரையீரல், ஈரல், சமிபாட்டு நீர்சுரப்பி, வயிறு, சிறுநீரகம் (Kidneys), முதுகு பகுதிகளில் ஏற்படும் நோய்களுக்கு சிறந்த நிவாரணி. ►
2000/-

MEN'S BRIEF



◄ முறையற்ற சிறுநீர் கழிப்பை சீராக்குகின்றது.
◄ மூல வியாதியை குறைத்து கட்டுப்படுத்துகின்றது.
◄ குன்றிய ஆண்மையை விரியமடையச் செய்கிறது.
◄ மலச்சிக்கலை படிப்படியாக இலகுவாக்கி சீராக்குகின்றது
1100/-

PILLOW PAD



மூளைப்பகுதியின் இரத்தச் சுட்றோட்டத்தை சீராக்குகின்றது ►
தூக்கமின்மையை குறைக்கின்றது ►
களைப்படைதலை குறைக்கின்றது ►
2200/-

WOMEN'S BRIEF



◄ சிறுநீர் முறையினை சீராக்குகின்றது
◄ மலச்சிக்கலை போக்குகின்றது
◄ குழந்தைபேறின் பின்னர் ஏற்படும் கருப்பை சுருக்கத்தினை கட்டுப்படுத்துகின்றது
◄ மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலியை போக்குகின்றது
1700/-

BRASSIERE



இரத்த சுற்றோட்டத்தை அதிகரித்து மார்பு புற்றுநோயை தவிர்க்கிறது. ►
மார்பு வீக்கத்தை தடுத்து கட்டமைப்பை பேணுகிறது. ►
குழந்தைபால் கொடுக்கும் தாய்மாரின் பால் சுரப்பினை சீராக்குகிறது. ►
இதயத்துடிப்பை சீராக்குகின்றது ►
1415/-

HEAD BAND



◄ நெற்றிப் பகுதியின் குருதிச் சுற்றோட்டத்தை அதிகரிக்கின்றது
◄ முகம் களைப்படைவதை தடுக்கின்றது
◄ தலைவலி, ஒற்றைத் தலைவலியை குணமடையச் செய்கின்றது
1500/-

CHITOSAN BEAUTY SOAP



முகம், உடம்பு, கை கால் போன்ற பகுதிகளை சுத்தப்படுத்தி அழகுபடுத்துகின்றது. ►
சருமத்தின் ஈரத்தன்மையை பேணி புத்துணர்ச்சியை அளிக்கின்றது. ►
தோல் சுருக்கத்தை போக்கி பதுப்பொலிவை அளிக்கின்றது. ►
320/-

Conybio Health Care Products (Private) Ltd.

271, Sea Street, Colombo 11. Tel : 01 - 434800, 01 - 435732

யாழ் நகரில் பெற்றுக்கொள்ள... THURKA MEDI CLINIC Manipay, Jaffna
POPULAR MOTOR STORES Stanley Road, Jaffna

CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR CONYBIO FIR

## தூக்கில் தொங்கிய சடலம்!

மட்டக்களப்பு,டிசெ.20

மட்டக்களப்பு, பார்வீதி இங்குராக் கொடை சீனித் தொழிற்சாலை விடுதியில் தூக்குப் போட்ட நிலையில் சடலமொன்றை நேற்று மட்டக்களப்பு பொலீஸார் மீட்டுள்ளனர். இவர் மட்டக்களப்பைச் சேர்ந்த எஸ்.தர்மபாலன் (வயது 58) என இனங்காணப்பட்டுள்ளார்.

இது தற்கொலையா, கொலையா என பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவ இடத்துக்கு மட்டக்களப்பு நீதிவான் ஏ.எல்.எம். அப்துல் நேரில் சென்று விசாரணை நடத்தினார். சடலம் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. (ஐ)

## இலவச பாடநூல் விநியோகம்

கோப்பாய் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கான இலவசபாடநூல் விநியோகம் இன்று காலை முதல் கோட்டக்கல்வி அலுவலகத்தில் இடம்பெறும் என்று கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## சனசமூக நிலையத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

கைதடி,டிசெ.20

யுத்த நடவடிக்கைகள் காரணமாகச் சேதமடைந்த கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தை மீளப் புனரமைத்துத் தரும்படி சாவகச்சேரி பிரதேச சபையிடமும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் நிலைய நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-75)

## திருவாசக முற்றோதல்

வடமராட்சி,டிசெ.20

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு உதயகாலப் பூசையுடன் திருவாசக முற்றோதல் நடைபெறும். திருவாசக முற்றோதலைத் தொடர்ந்து மாகேசுவர பூசை இடம்பெறும். (எ-173)

## 12 வருடங்களின் பின்னர் கீரிமலையில் நாளை திருவாதிரை உற்சவம்

சண்டிலிப்பாய்,டிசெ.20

12 வருடகால இடைவெளிக்கு பின்னர் கீரிமலை ஸ்ரீ.நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை திருவாதிரை உற்சவம் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை விஷேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் என்பன நடைபெறும். நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

பக்தர்கள் காலை முதல் மாலை வரை தெல்லிப்பழை சேந்தாங்குளம் ஆகிய பாதைகள் ஊடாக ஆலயத்துக்குத் தத்தமது வாகனங்களில் சென்று வர முடியும் என்று ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார். (எ-135)

## வலி.கிழக்கில் சமுர்த்தி வங்கிகள்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு சமுர்த்தி வங்கிகள் செயற்படவுள்ளன. வலி.கிழக்கு வடபகுதிக்கான சமுர்த்தி வங்கி ஆவரங்கால் பகுதியிலும் -

வலி.கிழக்கு தென்பகுதிக்கான சமுர்த்தி வங்கி கோப்பாயிலும் செயற்படவுள்ளன.

சமுர்த்தி வங்கிகளின் ஆரம்ப நிகழ்வு இம்மாதம் 30 ஆம்திகதி நடைபெறவுள்ளது. ஆவரங்கால் சமுர்த்தி வங்கியின் கீழ் 16 கிராமசேவையாளர் பிரிவுகளும், கோப்பாய் சமுர்த்தி வங்கியின் கீழ் 15 கிராமசேவையாளர் பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (எ-11)

## சிறந்தபண்ணையாளர் கௌரவிப்பு நாளை

அச்சுவேலி,டிசெ.20

யாழ்மாவட்டத்தில் வசிக்கும் சிறந்த பண்ணையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு திருநெல்வேலி மாவட்ட விவசாய பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் பொன். இராமநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். விசேட சிறப்பு விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி, காணி நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.அமிர்தலிங்கம் கலந்துகொள்வார். (எ-11)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.




## விசேட ஆங்கில வகுப்பு

**SPOKEN WITH GRAMMAR**

BY: R.A.NIROJAN

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பிரிவு

ஆரம்பம்: 21.12.2002

*விவரங்களுக்கு:*

பட்டப்படிப்புகள் கல்லூரி
(இலங்கை வங்கி முன்பாக)
*57/13, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

யுனைரெட் கல்வி நிலையம்
*கச்சேரி நல்லூர் வீதி,*
*நல்லூர்.* (11984)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பவனீதரன் சிவமதி (விஜி)

பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி பவனீதரன் சிவமதி அவர்கள் 17.12.2002 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் நடந்த தீ விபத்தில் அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் பவனீதரனின் (பிரான்ஸ்) அன்பு மனைவியும், அருமைத்துரை - மங்களேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் வைரமுத்து - கமலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரமுருகானந்தன் (பரா), கீர்த்திசீலன் (வவா - சுவிஸ்), அருள்மதி (ராஜி), தர்மசீலன் (ஸ்ரீ), பஞ்சசீலன் (சிவா - லண்டன்), கலைமதி (சுகி - யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம், இரண்டாம் வருடம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகநாதன் (A.S.N சுற்றுலா விடுதி உரிமையாளர்), நிவேதினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் நிதுலனின் (சுவிஸ்) அன்பு அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*பாலாவோடை,*
*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(C/25510)

## திருமதி தவமணி நடராஜா (B.A.)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தவமணி நடராஜா நேற்று (19.12.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற S.K.நடராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மகளும், இளைப்பாறிய பேராசிரியை திருமதி நவமணி லூதர் செல்வராஜாவின் சகோதரியும், காலஞ்சென்ற லூதர் செல்வராஜாவின் மைத்துனியும், துஷ்யந்தன், நிலூக்கா (ஜெனி) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.12.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*57, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(11998)

தகவல்:
திருமதி நவமணி செல்வராஜா

## சின்னக்குட்டி வல்லிபுரம்

(இளைப்பாறிய வைத்தியசாலை ஊழியர் - சாவகச்சேரி)

மட்டுவில் கிழக்கு, வங்களாவடியைச் சேர்ந்த சின்னக்குட்டி வல்லிபுரம் அவர்கள் நேற்று (19.12.2002) வியாழக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் ஜெயந்தினி (சுவிஸ்), ஜெயசோதிலிங்கம் (சுவிஸ்), ஜெகதினி (முன்னாள் ஊழியர், சாவகச்சேரி வைத்தியசாலை ), ஜெயவதனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமநாதன் (சுவிஸ்), குமாரி (சுவிஸ்), சுப்பிரமணியம் (கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), கிருபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் செல்வம், கௌதமி, சயந்தன், சிந்துஜா, பவித்திரா, செந்தூரன், கவிநயன், துவாரகா, துளசிகா ஆகியோரின் பேரனும் ரிஷானாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை மட்டுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*

(11994)

தகவல்:
நா.செல்வம் (பேரன்)

## திருமதி செல்வராணி ஜெகதீஸ்வரன்

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி ஜெகதீஸ்வரன் நேற்று (19.12.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - யோகம்மா தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - சோதிமணியின் மருமகளும் ஜெரேகா (பிரயோக விஞ்ஞான பீடம்,வயம்ப பல்கலைக்கழகம்), ஜோதிகா (பொறியியல் பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஜெரேன் (க.பொ.த உ/த மாணவன்,கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

- அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 5.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,உரும்பிராய்.* (C/25509)

தகவல்:
ஜெ.ஜெரேன் (மகன்)

## நடராசா கந்தசாமி (சற்குணபாலன்)

*(ஓய்வு பெற்ற சாலைப் பரிசோதகர் - C.T.B.)*

சரவணையைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு, சிற்பனையை வசிப்பிடமாகவும், தற்போது 342, பருத்தித்துறை வீதி, நல்லூரில் வசித்து வந்தவருமான நடராசா கந்தசாமி அவர்கள் 16.12.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை (காங்கேசு) - இராசம்மாவின் மருமகனும் இராசநாயகியின் அன்புக் கணவரும் அனுஷா, சரிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஐயாத்துரை, சிற்றம்பலம் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் காந்திமதி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் சாந்தலிங்கம், அருந்தவநாயகி, சுந்தரலிங்கம், சந்திரலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், சோமசுந்தரத்தின் சகலனும், அன்னம், சாரதாம்பாள், யோகேஸ்வரி, நிர்மலாகாந்தி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*342, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

(12000)

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள்.

## வைத்திய அதிகாரியின் வேண்டுகோள்!

சண்டிலிப்பாய்,டிசெ.20

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வலி.மேற்கு, வலி.தென்மேற்கு பகுதிகளில் உள்ள கிணறுகளில் இருந்து பெறப்படும் நீரைக்கொதிக்க வைத்து அருந்துமாறும்-

கிணறுகளுக்கு தத்தமது பிரிவு பொது சுகாதார பரிசோதகருடன் தொடர்புகொண்டு குளோரின் இட்டு நீரைப் பயன்படுத்துமாறும் மானிப்பாய சுகாதார வைத்திய அதிகாரி கே.கணேஸ்வராசா சம்பந்தப்பட்ட பகுதி மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலி.மேற்கு,வலி.தென்மேற்கு பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பல வீட்டுக்கிணறுகளுக்குள் வெள்ளம் புகுந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-135)

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர் பதிவு

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவுசெய்யப்பட்ட 4ஆவது அணி மாணவர்களைப் பதிவு செய்யும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிமுதல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தத்தமது பெற்றோருடன் வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் கேட்டுள்ளார்.

(ஐ-9)

## இந்துசமய பேரவையின் திருவாசக விழா

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். இந்து சமயப் பேரவையினால் நடத்தப்படும் திருவாசக விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஏழாலை மேற்கில் உள்ள கைதடி சைவச்சிறார் இல்லத்தில் அருட்கவி ச.விநாசித்தம்பி தலைமையில் நடைபெறும்.

காலை 6 மணி முதல் 11.30 மணி வரை இடம்பெறும் திருவாசக முற்றோதலைத் தொடர்ந்து பூசை, சிறப்புரை ஆகியன இடம்பெறும். (எ-173)


**அறிவொளி NALLUR**

**A/L 2005 இற்கான**

கணித / உயிரியல் / கலை

பிரிவுகள் ஆரம்பம் : 23.12.2002
திங்கள் 4.00 மணி

(எமது ஆசிரிய அணியினர்)

C.Maths: Mr.B.[illegible] B.Sc.
Phy. : Mr.M.[illegible]
Mr.K.[illegible] B.Sc.
*(தென்மராட்சி பிரபல ஆசிரியர்)*
Mr.N.[illegible] B.Sc.
Bio. : Mr.T.ஜெயசீலன் B.Sc.
Che. : Mr.[illegible] B.Sc.
Mr.ஜெயன்
Tam. : Mr.T.[illegible] B.A.(Hons)
Log. : Mr.A.S.கலைச்செல்வன் B.A.(Hons)
H.Cult : Mr.S.[illegible] B.A.(Hons)
Mr.S.[illegible] B.A.(Hons)
Dra.& Thea. : Mr.K.[illegible] (11962)

**வீடியோ நாடாக்கள் விற்பனை**

(நற்சாயம் பாவனையிலுள்ளது)

**100/-**

நைட் வீடியோ,
(11993) உரும்பிராய்.

**நாகம்ஸ்** கன்னாகம்

*விஜய், கௌசல்யா, சூரியா, சிம்ரன்* நடித்த

**நேருக்கு நேர்** (ரீலீஸ்)

காட்சிகள்: 11.00, 3.00

விசேட காட்சிகள் வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (பி.நே.)

*22.12.2002 முதல் ஏழுமலை* (11989)

**ராஜா** யாழ்ப்பாணம்.

18.12.2002 வரை



வில்லன் (ரீலீஸ்)

கா.நே.: 10.30, 2.30

16.12-18.12 வரை

UNIVERSAL SOLDIER

(War Film) 7.00 p.m. மட்டும். (C/25437)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்

அர்ஜுன், தபு, சார்லி நடித்த

**தாயின் மணிக்கொடி**

*காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00* (C/25436)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசுப்பிரமணியம் சரஸ்வதி

காரைநகர், தன்னை, களபூமியைப் பிறப்பிடமாகவும் வைரவப் புளியங்குளம், வவுனியாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் சரஸ்வதி அவர்கள் 17.12.2002 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவசுப்பிரமணியத்தின் (முன்னாள் பிரபல வர்த்தகர்,ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு) அன்பு மனைவியும் பரமேஸ்வரன்(லண்டன்), மகேஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன், யோகேஸ்வரி, குகனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் கந்தையா, இராசரத்தினம் (முருகன் ஸ்ரோர்ஸ், ஊர்காவற்றுறை) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (ஜேர்மனி) மற்றும் சிவராசா, சிவபாலன், சிவஞானம், தவமணி (M.M.B. ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி), சிவலட்சுமி, சிவயோகம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 124/1, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*124/1, இராசாவின்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
(11982) க.சிவசுப்பிரமணியம் (கணவர்)

## வைத்தியநாதர் கந்தசாமி

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியநாதர் கந்தசாமி அவர்கள் 17.12.2002 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வைத்தியநாதர் - அன்னம்மாவின் ஏக புதல்வனும் பவானியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகேசு சரஸ்வதியின் அன்புச் சகோதரரும் பேரின்பதாசன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி, கல்வித்திணைக்களம், மன்னார்), தவமணிதாசன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), தனபாலசிங்கம் (கனடா), திருமதி ஞா.தேவகாந்தி (பெரியபுலம் ம.வி.), நந்தகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மாவதி (ஊறணி ம.வி.), சிவகாமி (விவேகானந்தாக் கல்லூரி), கோகிலாதேவி (கனடா), ஞானசூரியன் (வலி.தெ.மே.பிர.சபை), ஜெயசித்திரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிதா, கார்த்திகா (உயிரியற்பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்), சங்கீதா (பெங்களூர்), மயூரன் (கனடா), கபிலன் (கனடா), அபிராமி (கனடா), நயனி (கனடா), மானசி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மஞ்சவனப்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(C/25508)

தகவல்:
க.தவமணிதாசன்.

## இளையதம்பி முருகுப்பிள்ளை

மீசாலை வடக்கைச் சேர்ந்த இளையதம்பி முருகுப்பிள்ளை நேற்று (19.12.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி தம்பதிகளின் அன்பு மகனும், மீனாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், குமாரவேலு, பரமசாமி (அச்சகம், யாழ்ப்பாணம்), குணரத்தினம், சரஸ்வதி (ஆசிரியை, கண்டி), அமிர்தலிங்கம் (பிரான்ஸ்), இரத்தினபூபதி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் அழகேஸ்வரி, மணி, செல்வராசா, அருணாசலம் (பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம் - பேராதனை), திருமதி அமிர்தலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் குணவதனி (இந்தியா), குணராசா (லண்டன்), தமிழ்ப்பிரியா, பஞ்சாட்சரமூர்த்தி, அனுஷியா (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பாலமயூரன் (மாணவன், கண்டி, ராஜவளை தேசிய பாடசாலை), கீதா (மாணவி, பம்பலப்பிட்டி இந்து மகளிர் கல்லூரி), கெவின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் பரணீதரனின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.12.2002)வியாழக்கிழமை நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*மீசாலை வடக்கு,*
*மீசாலை*

(11996)

தகவல்:
குமாரவேலு (மகன்)

## வன்னியசிங்கம் சுப்பிரமணியம்

(தினகரன் மணியம் - 24 ஸ்ரீ 6873 லொறி சாரதி)

ஈவினையைச் சேர்ந்த வன்னியசிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (19.12.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், தவகுமார், சுரேஸ்குமார், சசிகுமார் (சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்), சந்திரகுமார், கஜேந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் ஏக புதல்வரும் காலஞ்சென்ற சிவகுரு - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவரத்தினம் (சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்), சிவகுமார், தவஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிலாஜினி, கயாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஈவினை விலங்கன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(11992)

தகவல்:
குடும்பத்தினர்.

## துரையப்பா தர்மராஜா

சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ். றோட், புநாறி மரத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா தர்மராஜா அவர்கள் 17.12.2002 செவ்வாய்க்கிழமை இல.14 சுவாம்பிள்ளை அவ்னோ, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு - 13 இல் அகாலமரணமானார்.

அன்னார் துரையப்பா - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் செம்மனச்செல்வியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37, கதிரேசன் வீதி,*
*வவுனியா.*

(11997)

தகவல்:
சற்குணலிங்கம் - மைத்துனர்
(தபால் அதிபர், வவுனியா)

# ஆலையடிக்குளம் உடைப்பெடுப்பு; மக்கள் வேறிடத்துக்கு இடம்பெயர்வு

காரைதீவு,டிசெ.20

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள ஆலையடிக்குளம் உடைப்பெடுத்திருப்பதனால் கோமாரியும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களும் வெள்ளத்தில் முழ்கியுள்ளன.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு உடனடியாக நேற்றுக்காலை அங்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்க உதவினார்.

இதேவேளை, திருக்கோவிலிலுள்ள அகதி முகாம்களும் வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளன. இதனால் சுமார் ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர நேரிட்டுள்ளது. அம்மக்களையும் நேரு எம்.பி. சென்று பார்வையிட்டுள்ளார்.

திருக்கோவில் பிரதேச செயலக பகுதியில் 4ஆயிரத்து 929 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜா கூறினார்.

நேற்று முற்றாக இடம்பெயர்ந்த 75 குடும்பங்களுக்கு மாத்திரமே ஒரு வாரகாலத்திற்கு சமைத்த உணவு வழங்குவதற்கு அரச அதிபரிடமிருந்து அனுமதி கிடைத்துள்ளதாக எம்.பி. கூறினார். ஆலையடிவேம்புப் பகுதியில் 3ஆயிரத்து 880 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தும் 500 குடும்பங்களுக்கு ஒரு வாரகால உலருணவு வழங்குமாறு கூறப்பட்டதாக பிரதேச செயலர் ஏ.கே. அருள்ராஜா கூறினார். (ஐ)

## மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளினால் இவர் கடத்தப்பட்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதில் இருந்து இன்று வரை தமது கட்சி உறுப்பினர்கள் இருவர் காணாமற்போயுள்ளனர் எனவும் அவர்களை விடுதலை செய்யுமாறும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

இவர் காணாமற்போனதற்கும் தங்களுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்றும், சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் தீயசக்திகள் தங்களுக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு முற்படுகின்றன என்றும் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

## காஞ்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய விழாவில் 50இற்கும் மேற்பட்ட சிவாச்சார்யர்கள் பங்கு கொண்டு வேதம் ஓதுவர். குடாநாட்டைச் சேர்ந்த நாதசுர-தவில் கலைஞர்கள் கான மழை பொழிவர்.

இதேவேளை -

காஞ்சிகாமகோடி பீடாதிபதி சங்கராச்சார்ய சுவாமிகள் இன்று காலை 10 மணிக்கு காரைநகர் ஆலயத்தில் கூடியிருக்கும் பக்தர்களுக்கு தொலைபேசி மூலம் ஆசி வழங்கவிருக்கிறார். (ஐ-3)

## 3 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிந்த கட்டடத் தொகுதியில் மீட்புப் பணிகள் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றன. நேற்று முற்பகல் மேலும் ஒரு சடலம் அங்கிருந்து கண் டெடுக்கப்பட்டது. அதனையும் சேர்த்து தீவிபத்தில் பலியானோரின் எண் ணிக்கை 20 ஆக உயர்ந்தது.

மேலும் சில சடலங்கள் கட்டட இடிபாடுகளுக்கிடையே இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இத்தீவிபத்து குறித்து இரண்டு பொலீஸ் குழுக்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றன. புறக்கோட்டைப் பொலீஸ் நிலையப் பிரதம இன்ஸ்பெக்டர் ஆனந்த வியன பத்திர, வாழைத் தோட்டப் பொலீஸ் நிலைய இன்ஸ் பெக்டர் டபிள்யூ.யூ.எம்.சந்திரதிலக்க ஆகிய இருவரும் இக்குழுக்களுக்குத் தலைமை தாங்குகின்றனர். (ஐ-3)

## செய்தியாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் கடந்த சில தினங்களாக தமக்குரிய பிரதேசத்தில் வசிக்கும் செய்தியாளர்கள், பத்திரிகையாளர்களின் விவரங்களைச் சேகரித்து வருவதாக அறிய வந்துள்ளது. ஏனைய பொலீஸ் பிரிவுகளிலும் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று தெரிகின்றது. (ஐ-135)

# மினிபஸ் தடம் புரண்டது!

கோப்பாய்,டிசெ.20

அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மினிபஸ் ஒன்று நேற்று மாலை இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக வீதியை விட்டு விலகி தலைகீழாக தடம் புரண்டது. எனினும் பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் காயங்கள் ஏதும் இன்றித் தப்பினர். (ஐ-3)

# வயோதிபரை மோதிய ஓட்டோ தப்பியது

யாழ்ப்பாணம்,டிசெ.20

கொட்டடிப் பகுதியில் ஆஸ்பத்திரி வீதியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வயோதிபர் ஒருவரை மோதிக காயப்படுத்திய ஓட்டோ அங்கிருந்து தப்பிச் சென்றது.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் டேவிட் வீதியைச் சேர்ந்த கபிரியேல் பிரான்சிஸ் (வயது61) என்ற குடும்பஸ்தரையே பின்புறமாக வந்த ஓட்டோ மோதியது.

தலையில் காயமடைந்த இநநபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ஐ-9)

## பலியானோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலியானமையிலும் சந்தேகம் நிலவுவதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இரத்தினம் பரராஜசிங்கம் என்பவரும் அவரது மனைவி, மூன்று பிள்ளைகள் கட்டடத்தில் உள்ள அவர்களது வீட்டில் மூச்சுத் திணறி மரணித்துள்ளனர்.

கட்டடத்தில் தீ ஏற்பட்டதும் பரராஜசிங்கம் கொழும்பு 13 பிக்கறிங்ஸ் வீதியில் உள்ள அவரது உறவினர் வீட்டுக்கு தொலைபேசி அழைப்பினை எடுத்து கட்டடத்தில் தீ ஏற்பட்டுள்ளதாகவும் தாம் வீட்டை விட்டு கீழே இறங்கப்போவதாகவும் கூறியுள்ளார்.

பின்னர் சிறிது நேரத்தின் பின் உறவினர்கள் அவரது வீட்டுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்த போது தொலைபேசி அழைப்பினை யாரும் எடுக்கவில்லை. இதனால் அவர்கள் வெளியேறிவிட்டனர் என உறவினர்கள் நினைத்துள்ளனர்.

ஆனால், அவர்கள் வீட்டை விட்டு வெளியேறாதது ஏன்? என்று தற்போது சந்தேகம் வலுவடைந்துள்ளது.

ஐந்து பேர் பலியான வீட்டில் இருந்த தங்க நகைகள் எதனையும் காணவில்லை என்று உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார். சுவிஸ்லாந்துக்கு ஒரு மகன் செல்ல இருந்தமையினால் பெருமளவு நகைகள் வீட்டில் இருந்ததாகவும் ஆனால் சம்பவத்தை அடுத்து நகைகளைக் காணவில்லை என்றும் உறவினர்கள் கூறுகின்றனர். (ஐ)


O/L முடிந்த A/L மாணவர்களுக்கான கணனி வகுப்புகள்

**General Information Technology - GIT**

Drive Your IT on GIT

Syllabus Covers "London A/L" Computing
- GIT
- MS Office
- Internet
- கணனியுடான A/L

No Scholarships!
But Less Charges!!
Gain International Standard!!!



STP Computer World (Pvt.) Limited, Kantharmadam, Jaffna
Branch: Sankaththanai, Chavakachcheri
ஆரம்பம் 21-12-2002



**BITSMANS**
கல்வி நிறுவனம், மானிப்பாய்.

A/L 2004
அசேதன இரசாயனம்
INORGANIC
N. மகேஸ்வரன்
ஆரம்பம்: 22.12.2002
Sun.4.30 p.m (11915)



**ராம்கோ சிமெந்து**

இலங்கையில் மட்டுமா இல்லை

இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை

ஆசியாவில் முதலாம் தர (நம்பர் 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்படும் RAMCO சிமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு! ராம்கோ சிமெந்து வந்துவிட்டது! முன்கூட்டியே பதிவு செய்யவும்! போக்குவரத்து வீநியோகம் இலவசம்!!

முக்கிய குறிப்பு : குடாநாட்டு மக்களின் பல கோடி ரூபா பணத்தை மீதப்படுத்திய சிமெந்து ராம்கோ சிமெந்து

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்

**ஈஸ்வரபகவான் & கொம்பனி**

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், T.P.: 021 222 2350 (11980)


# கடை உடைத்து பொருள்கள் சூறை!

கொழும்பு,டிசெ.20

கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியில் செவ்வாயன்று தீவிபத்து நடந்த கட்டடத்துக்கு அருகே உள்ள கடை ஒன்று உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டிருக்கிறது.

சம்பவம் நடந்த இரவு தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர் உரிமையாளர் தனது கடையை பூட்டிவிட்டுச் சென்றிருந்தார். ஆனால், பூட்டு உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன.

பாதுகாப்பு போடப்பட்டிருந்த அந்தப் பகுதியில் கடையை உடைத்தவர்கள் யார் என்பது மர்மமாக உள்ளது. (ஐ)

## தமிழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் கலந்துகொள்வதா, இல்லையா என்பது அவர்களைப் பொறுத்த விடயம் என்றும் அந்த அதிகாரி கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் சொன்னார். (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை பாலசிங்கம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரும் எம்பி.சுவாம்பிள்ளை அன்கோ நிறுவன உரிமையாளருமான செல்லத்துரை பாலசிங்கம் அகாலமரணமானார்.

அன்னார் செல்லத்துரை - பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் சின்னத்தம்பி - செல்லம்மாள் ஆகியோரின் அன்பு மருமகனும் மாருதப்புரவீகவல்லியின் அன்புக் கணவரும் சிவாஜினி, காலஞ்சென்ற நளினி மற்றும் சுகந்தினி (ஆஸ்திரேலியா), ஸ்ரீகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவகுமரன், தயாபரன் (ஆஸ்திரேலியா), சிவதர்சினி (சுவிஸ்), சிவநிதி (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவி, அக்ஷரன், வைஷ்ணவி, அபிஷன், சரணியன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் புவனேஸ்வரி, சர்வலோகேஸ்வரி, சொர்ணபுரீஸ்வரி, பாலச்சந்திரன் (கனடா), சற்குணேஸ்வரி ஆகியோரின் அருமைச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை கொழும்பு கனத்தை றேமன்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று மாலை 4 மணிக்கு பொரளை மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2C, 40 ஆவது ஒழுங்கை,*
*வெள்ளவத்தை,கொழும்பு - 06* (C/25511)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

## பாலசிங்கம் ஐங்கரன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் ஐங்கரன் கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் - மாருதப்புரவீகவல்லி ஆகியோரின் அருமை மகனும் சுந்தரலிங்கம் - சந்திராதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் சிவநிதியின் அன்புக் கணவரும் அபிஷனின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை கொழும்பு கனத்தை றேமன்ஸ் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இன்று மாலை 4 மணியளவில் பொரளை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
*2C, 40 ஆவது ஒழுங்கை,*
*வெள்ளவத்தை, கொழும்பு 6.*
*தொலைபேசி: 364720* (C/25513)

தகவல்:
மனைவி, மகன்.

## சண்முகம் சிவகுமரன்

கைதடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சிவகுமரன் கொழும்பில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் சண்முகம் - தங்கம் ஆகியோரின் அன்புமகனும் காலஞ்சென்ற பாலசிங்கம் - மாருதப்புரவீகவல்லி ஆகியோரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரி, செல்வக்குமரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நித்தியானந்தனின் அருமை மைத்துனரும் சிவாஜினியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.12.2002) வெள்ளிக்கிழமை கொழும்பு கனத்தை றேமன்ஸ் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று மாலை 4 மணிக்குப் பொரளை பொதுமயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முகவரி:*
*42, கல்பொத்த வீதி,*
*கொட்டாஞ்சேனை, கொழும்பு-13*
*தொலைபேசி: 342645/364720* (C/25512)

தகவல்:
மனைவி.

## சீனியர் பாலசிங்கம்

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் பாலசிங்கம் 19.12.2002 அன்று காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.* (C/25514)

தகவல்:
P.மயில்வாகனம் (மருமகன்)

## திருமதி றோஸ் சில்வெஸ்ரர்

(நவமணி)

சுண்டுக்குளி சஞ்சுவாம் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி றோஸ் சில்வெஸ்ரர் (நவமணி) அவர்கள் நேற்று (19.12.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.J.A சில்வெஸ்ரர் (மட்டுநகர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - போகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், அன்றனீற்றா - பயஸ்சேவியர் (நெதர்லாந்து), திருமதி இமக்குலேற்றா டக்ளஸ்யோண் (ஜேர்மனி), திருமதி சில்வறின் விஜயநாதன் (லண்டன்), வேதிங்டன் சில்வெஸ்ரர் (ICRC யாழ்ப்பாணம்,IPAS இயக்குநர்), வேர்ஜினியா சில்வெஸ்ரர் (யாழ்.பல்கலைக்கழகம், வெளிவாரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான மரியதாஸ்(தபால் அதிபர், மட்டுநகர்), மாசிலாமணி (பொலீஸ் சார்ஜன்ட்) மற்றும் மத்தியூஸ், திருமதி லீலா எதிர்மனசிங்கி, திருமதி பவளம் கிறிஸ்ரின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் டார்வின், டியானி, டிலான், டேறோன், றொசித் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (21.12.2002) சனிக்கிழமை பிற்பகல் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*85,இராசாவின்தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P NO 0777-636593* (12003)

தகவல்:
வேதிங்டன் சில்வெஸ்ரர்
(மகன்)